# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர் 18 இதழ்: 06 ● ஹிஜ்ரி 1411 ர. அவ்வல் ● செப்டம்பர் 1990

## ரஷ்யாவில் கம்யூனிஸம் கருகி இஸ்லாம் மலர்கிறது !

## இஸ்லாமியக் குடும்ப ஆண்டு !

விலை
7.50

இஸ்லாமிய இலட்சியக்குரல் *AL HASANATH Islamic Monthly*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

# அல்ஹஸனாத்

இஸ்லாமிய இலட்சிய ஏடு

வெளியீடு

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
Sri Lanka Jama'ath-e-Islami
77, Dematagoda Road
Colombo-09.
Sri Lanka.
Phone- 692760

அச்சுப் பதிவு

ஏ. பீ. ஸி. அச்சகம்
520, தெமட்டகொட வீதி
கொழும்பு-9 (இலங்கை)
தொலைபேசி: 698771

விலை விபரம்

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ரூ | 7.50 |
| வருட சந்தா | ரூ | 100.00 |
| (உள்நாடு) | | |
| இந்தியா, பாகிஸ்தான், மாலை தீவு, சிங்கப்பூர், மலேசியா | | 300.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் | | 350.00 |
| ஏனைய நாடுகள் | | 400.00 |
| (வெளிநாடு) | | |


உள்ளே...

| | பக்கம் |
|---|---|
| இஸ்லாமியக் குடும்ப ஆண்டு | 3 |
| மனிதர்களுக்கு ஏற்றது இஸ்லாமிய சட்டம் | 3 |
| ஆரோக்கியமான குடும்ப அமைப்பு | 5 |
| இஸ்லாமிய குடும்பத்தின் பரப்பு | 7 |
| பேட்டி | 9 |
| இஸ்லாமிய அடிப்படை வாதமா? | 11 |
| ரஷ்யாவில் கம்யூனிசம் கருகி இஸ்லாம் மலர்கிறது | 13 |
| ஜமாஅத் இன்றி இஸ்லாமில்லை | 19 |

● சிறுகதை ● இஸ்லாமிய அரசியல் ● கவிதைகள்


விசுவாசிகளே! இஸ்லாத்தில் பூரணமாக நுழைந்து விடுங்கள். (அல்குர்ஆன் 2:208)

1990 செப்டம்பர் ரபீ அவ்வல் 1411

ஆசிரியர் கருத்து

## இஸ்லாமியக் குடும்ப ஆண்டு

ஹிஜ்ரி 1411 முஹர்ரம் மாதத்துடன் ஆரம்பமான நடப்பு வருடத்தை இஸ்லாமியக் குடும்ப ஆண்டாகப் பிரகடனப்படுத்துவது என்று ஜமாஅத் தீர்மானித்தது. ஜமாஅத்தின் ஏனைய பணிகளைத் தொடர்வதோடு குடும்ப மட்டத்தில் இஸ்லாமியக் கருத்துக்களைச் செயல்படுத்தும் அதன் முயற்சிக்கு கூடிய முக்கியத்துவம் அளிப்பதே இதன் நோக்கமாகும்.

பொதுவாக மனித நாகரிக வளர்ச்சியிலும் குறிப்பாக சமூகங்களின் எழுச்சி, சட்டத்துறை, பொருளாதாரம், கல்வி கலாசாரம் என்பன போன்றவற்றின் வளர்ச்சியிலும் குடும்பத்தின் முக்கியத்துவம் எல்லா இன மக்களாலும் முன் எப்போதையும்விட தற்காலத்தில் நன்கு உணரப்படுகிறது.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை இந்த அம்சம் மிக ஆரம்ப காலத்திலேயே வலியுறுத்தப்பட்டது. அசைவாத விசுவாசம் உள்ள தனி மனிதர்களை உருவாக்குவதில் ஆரம்பத்தில் அக்கறை காட்டிய இஸ்லாம் அடுத்து அவ்வாறான மக்களைக் கொண்ட இஸ்லாமியக் குடும்பங்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டியது.

குர்ஆன் கூறும் சட்டதிட்டங்களில் ஈமான், நம்பிக்கை, இபாதத்— வணக்க வழிபாடுகள் என்பவற்றுக்கு அடுத்ததாக குடும்பம் பற்றிய சட்டதிட்டங்களே மிகவும் விரிவாக இடம் பெற்றுள்ளன; நபி (ஸல்) அவர்களும் பலர் அறிய தங்களது தஃவாப் பணியை மேற்கொள்ள முனைந்த போது முதலில் தங்களது குடும்பத்தவர்கள் மத்தியிலேயே பிரசாரம் செய்தார்கள். நபிகளாரிடம் இஸ்லாத்தை ஏற்ற ஸஹாபாக்களும் தாம்கள் இஸ்லாத்தை ஏற்றபின் தங்கள் குடும்ப உறுப்பினர்களையும் அதை ஏற்கச் செய்வதில் கரிசனை காட்டினார்கள்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட குடும்பங்களைக் கொண்டே ஆரம்பகால இஸ்லாமிய சமூகம் உருவானது. மிகவும் குறுகிய ஒரு கால எல்லையில் அதி உன்னதமானதும் எல்லாக் காலத்துக்கும் முன்மாதிரியுமான ஓர் இஸ்லாமிய சமூகத்தைத் தோற்றுவித்து ஒப்பற்ற ஓர் ஆட்சி முறையையும், கலாசார நாகரிகத்தையும் நபி (ஸல்) அவர்களால் தோற்றுவிக்க முடிந்ததன் இரகசியம் இதுவாகும்.

எனவே உண்மை முஸ்லிம்களாக வாழ விரும்புவோர் ஆரம்ப கால முஸ்லிம்களைப்போல தமது குடும்பங்களை இஸ்லாமிய வழியில் நெறிப்படுத்துவதில் மிகவும் கூடிய கவனஞ் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

நீண்ட காலமாக இத்துறையில் கவனஞ் செலுத்தாதிருந்தாலும் அரசியல் ஆதிக்கம், பொருளாதார தேவைகள், கல்வி முயற்சிகள் வெகுசன தொடர்பு சாதனங்களின் ஆக்கிரமிப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன போக்குவரத்து வசதிகளின் வளர்ச்சி என்பன போன்றவற்றின் காரணமாகவும் முஸ்லிம்களாகிய எமது குடும்ப அமைப்பும் வெகுவாகப் பாதிக்கப் பட்டுவிட்டது. 1977ம் ஆண்டுக்குப்பின்னர் அதிமுக மான வெளிநாட்டு வேலை வாய்ப்பு இத்துறையில் மிகவும் பெரிய பாதிப்பாக அமைந்து விட்டது! இவற்றின் விளைவுகளை நகரப்புறங்களில் மட்டு மன்றி நாட்டுப்புறங்களிலும் குக்கிராமங்களிலும் கூட இப்போது நாம் காணமுடிகிறது!

இதே காலத்தில் ஜமாஅத்தே இஸ்லாமியும் வேறு சில இயக்கங்களும், முஸ்லிம்களிடையே வெகு துரித மாகச் சரிந்து வரும் குடும்ப அமைப்பைச் சீர்செய்து மீண்டும் இஸ்லாமிய வழியில் நெறிப்படுத்தும் முயற்சி களில் ஓரளவு ஈடுபாடுகாட்ட ஆரம்பித்தன. சில உலமாக்களும் ஒருசில சீர்திருத்தவாதிகளும் கூட இத்துறையில் ஆர்வம் காட்டினார்கள். இதனால் அந்த வீழ்ச்சிகளைத் முற்றாகத் தடுத்து நிறுத்த முடியாது போனபோதிலும் வளர்ந்து வரும் ஆபத்தை மக்களுக்கு உணர்த்த முடிந்தது. குடும்பங்களை ஓரளவு இஸ்லாமிய வழியில் சாத்தியமாக்கும் முயற்சி கள் அங்குமிங்கும் தோன்ற வழி பிறந்தது.

ஆயினும் இஸ்லாமிய நெறியிலிருந்து சரிந்து விட்ட குடும்பத்தை மீண்டும் சீர்செய்வதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இதன் பொருள் அது கைகூடாத முயற்சி என்பதல்ல. மாறாக இத் துறையில் பொறுமையுடன் கூடிய அறிவு பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமா கும் என்பதே!

மேலோட்டமான மார்க்க அறிவும் வழிப்படுத் தப்படாத உணர்ச்சியும் மட்டும் இத்துறையில் பூரண பயனைத் தராது. இஸ்லாமிய போதனை களை விளங்கி அமுல்நடத்தச் செயல்படுத்த முறையான முயற்சிகளை மேற்கொள்ளாது உணர்ச்சிகளுக்கே முதலிடம் கொடுத்த காரணத்தால் நமது வேறு பல துறைகள் பாதிக்கப்பட்டது போல 'ஹிக்மத்தும், மௌஇழதுல் ஹஸனாவும்' இல்லாத முயற்சிகளால் இத்துறையும் பாதிக்கப்படலாம்!

ஆகவே முதலில் குடும்ப வாழ்க்கை சார்ந்த இஸ்லாமிய சட்டதிட்டங்களையும் ஒழுக்க வரம்புகளை யும் நன்கு விளங்கி அமுல்நடத்தச் செயல்படுத்துவதற் குத் தடையாக அமையும் அல்லது செயல்படுத்துவ தைத் தாமதமாக்கும் புறக்காரணிகளை இனங் காண வேண்டும். அடுத்து இஸ்லாமிய சட்டங்களை செயல்படுத்த உதவும் சூழலை உருவாக்கவும் அவ்வொரு கட்டத்திலும் பொருத்தமான சட்டதிட் டங்களை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய வகையிலான முயற்சிகளை ஓராண்டில் செய்து முடிப்பது சாத்தியமாகாது. இதற்குப் பல ஆண்டுகள் தேவைப்படலாம். அது மட்டுமல்ல இத்துறை முறையான முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிட் டால் இழப்புகளின் தொகை பன்மடங்காக இடமுண்டு.

எனவே நான் விரும்பும் இஸ்லாம் என் குடும்பத் திலும் காணப்பட வேண்டும். நானும் என் குடும்பமும் விரும்பும் இஸ்லாம் எமது நண்பர்களின் குடும்பங் களிலும், எமக்கு அறிமுகமானவர்களின் குடும்பங்களி லும் இருக்க வேண்டும் என்று விரும்பும் அனைவரை யும் குடும்பத்தை இஸ்லாமிய நெறிப்படுத்தும் முயற் சியில் எம்முடன் ஒத்துழைக்க முன்வருமாறு அழைக் கிறோம்.

இன்ஷா அல்லாஹ் இத்துறையில் ஜமாஅத் மேற் கொள்ளவிருக்கும் பல வேறு நடவடிக்கைகளிலும் பங்கு கொள்வதோடு மேலுள்ள வேறு நடவடிக்கை களைப்பற்றி ஆலோசனைகளை வழங்குமாறு ஆர்வ முள்ள அனைவரையும் வேண்டுகிறோம்.

இஸ்லாமிய போதனைகளைப் பின்பற்றி நடந்து அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதும் ''விசுவாசி களே, நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தவர் களையும் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள் ளுங்கள்.'' (66: 6) என்ற எச்சரிக்கையை மதித்து நடந்து ஈடேற்றம் பெறுவதுமே எமது இந்த முயற்சிகளுக்கான நோக்கமாகும்.

## இது யாருடைய வேலை?

'சிந்திப்போம் செயல்படுவோம்' என்ற தலைப்பில் இஸ்லாமிய மாணவர் அமைப்பு, அக்கரைப்பற்று. என்ற பெயரில் நான்கு பக்கங்களில் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று செலக்ஷன் அச்சகத்தில் 05.09.90ல் அச்சிடப்பட்ட தாக அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

துண்டுப் பிரசுரத்தில் எழுதப்பட்டுள்ள விஷயங் களுக்கு ஆதாரமாக அமைந்த உசாத்துணை நூல் களின் பட்டியலில் ஜமாஅத் வெளியீடுகளின் பெயர் கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் அந் தத் துண்டுப் பிரசுரத்தைப் படிப்போர் அது ஜம் இய் யதுத் தலபாவின் இஸ்லாமியினரால் வெளியிடப் பட்டது என்று நினைக்க இடமுண்டு. ஆனால் ஜம் இய்யதுத் தலபா இவ்விதமான பிரசுரம் எதையும் வெளியிடவில்லை.

முதலில் துண்டுப் பிரசுரத்தில் குறிக்கப்பட்டுள்ள பெயரில் உள்ள ஒரு மாணவர் அமைப்பினால் அது வெளியிடப்பட்டிருக்க வேண்டும். அல்லது அந்தப் பெயரில் வேறு எவரும் அதை வெளியிட்டிருக்க வேண்டும்.

அண்மைக் காலத்தில் படித்த பலர் பண்பற்ற முறையில் இவ்வாறான துண்டுப் பிரசுரங்களையும் சிறு வெளியீடுகளையும் சுவரொட்டி போன்றவற்றை யும் வெளியிட்டு வருகின்றனர். இது வருந்தத்தக்கது. எனவே இவ்வாறான அறிக்கைகளை வெளியிடுவோர் தங்களின் உண்மையான முகவரியுடன் வெளியிடுவதே முறையான செயலாகும்.

ஜம்இய்யதுத் தலபதில் இஸ்லாமிய்யா இவ்வித மான முகவரியில்லாத வேலைகளைச் செய்யாது என்பதையும் எப்போதும் அதன் அறிக்கைகள் முகவரி யுடனேயே அமையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- நாஸிம்

ஜம்இய்யதுத் தலபதில் இஸ்லாமிய்யா,
77, தெமட்டகொடை வீதி, கொழும்பு-9.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களுக்கு ஏற்றது இஸ்லாமிய சட்டமே!
# முஸ்லிம்களே! உணருங்கள்

— ஷஹீத் அப்துல் காதிர் அவ்தா (ரஹ்)

**'ஜாஹிலிய்யத்தான சட்டங்களையா இவர்கள் விரும்புகிறார்கள் உறுதியான நம்பிக்கையுடைய மக்களுக்கு அல்லாஹ்வைவிட அழகான தீர்ப்பளிப்போர் யார் இருக்கிறார்கள்?'**

முஸ்லிம்களின் பிற்போக்கிற்கும் வீழ்ச்சிக்கும் இஸ்லாம் எவ்வகையிலும் பொறுப்பல்ல. ஏனெனில் இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்கள் இப்பூவுலகில் காணப்பட்ட சட்டங்களை விடவும் என்றும் எல்லாவகையிலும் சிறந்தவை என்பது வெறும் வாதக் கூற்றல்ல. ஏனெனில் இன்றுவரை சட்ட மேதைகள் உருவாக்கிய சட்ட அடிப்படைகள் யாவற்றிலும் இஸ்லாமிய சட்ட அடிப்படைகள் மிக அழகாக அமைந்திருக்கக் காண்கின்றோம்; சட்டத்துறை மேதைகள் நமக்குத் தரும் புதுப்புது தத்துவங்களெல்லாம் அவற்றைவிடப் பூரணமான முறையில் இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களில் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கின்றோம்.

இஸ்லாமியர் அல்லது முஸ்லிம்கள் எனப்படுவோரின் பிற்போக்கிற்கு அல்லது வீழ்ச்சிக்கு எவ்வகையிலும் இஸ்லாமிய சட்டங்கள் காரணங்களாக இருந்ததில்லை. ஆனால் உண்மையான காரணம் அவர்கள் இஸ்லாமிய சட்டங்களை விட்டுவிட்டதேயாகும். ஏனெனில் இன்று பெரும்பாலான முஸ்லிம்கள் தங்கள் பெயர்களாலும் பேச்சினாலும் முஸ்லிம்களேயன்றி அவர்கள் தங்கள் நம்பிக்கையாலும் செயலினாலும் முஸ்லிம்கள் அல்லர்; சிலர் இக்கூற்றுக்கு விதிவிலக்காக இருக்கலாம். இவர்களுக்கு அல்லாஹ் அருள்புரிவானாக!

## முரண்பாடு

புதிய சட்டதிட்டங்கள்தாம் மக்களை முன்னேற்றுகின்றன என்பது உண்மையாயின், இன்று இங்கிலாந்தைவிட பெல்ஜியம் எல்லாவகையிலும் சக்தி பெற்று சிறந்து விளங்க வேண்டும். ஏனெனில் பெல்ஜியம் நாட்டுச் சட்டங்கள் மிகமிக நவீனமானவை; இங்கிலாந்தின் சட்ட திட்டங்கள் அனேகமாக பழையவை. இங்கிலாந்தில் சில சட்டங்கள் அதன் இருண்ட காலத்தைச் சேர்ந்தவை.

மற்றொரு வகையிற் பார்த்தால், புதிய சட்டங்களுக்கே மக்களை முன்னேற்றுவதில் அதிக சக்தியுண்டு என்பது உண்மையானால், இஸ்லாமியர்தாம் மிக்க முன்னேற்றமடைந்திருக்கவேண்டும். ஏனெனில் அனேகமான சட்டங்களுக்கு மூலமாய் அமைந்துள்ள ரோமன் சட்டங்களைவிட இஸ்லாமிய சட்டங்கள் மிகவும் புதியன. எனவே இக்கூற்றிலும் உண்மை எதுவும் இல்லை.

## முஸ்லிம்களே உணருங்கள்

இஸ்லாம்தான் முஸ்லிம்கள் என்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கியது. அதுதான் உலகிலே சிறந்த சமூகமாக மாற்றியதும், உலக சாம்ராஜ்யங்களையெல்லாம் இவர்களின் ஆட்சிக்குள் கொண்டுவந்ததும் இவர்களுக்கு அறிவையும் ஒழுக்கத்தையும் அள்ளிக் கொடுத்ததும் இஸ்லாமே. கௌரவத்தையும் மரியாதையையும் தந்து மனோதிடத்தையும் பலத்தையும் தந்தது இஸ்லாமே. அதுவே நாடுகளை வென்று ஆட்சிகளை நிறுவிய வீரச் செயல்களை உருவாக்கியது. அறிவுக்கும் இலக்கியங்களுக்கும் நல்ல ஞானங்களுக்கும் அளவிட முடியாத அரும் பணியாற்றிய அறிவுக் களஞ்சியங்களைத் தந்தது இஸ்லாமே.

உண்மையான சமத்துவத்தையும் மெய்யான நீதியையும் உலகில் முதன்முதல் நிலைநாட்டியது இஸ்லாமிய சட்டங்கள் தாம். எல்லோரும் நல்ல காரியங்களிலும் இறை பக்தியிலும் ஒத்துழைக்க வேண்டும்; நன்மையை ஏவி தீமையை விலக்குவது அவசியம் என வற்புறுத்தியது இஸ்லாமிய சட்ட அமைப்பு ஒன்றுதான். இன்றைய நவீன சட்டங்கள் இன்றுவரை இஸ்லாமிய ஷரீஅத் கொண்டு வந்த சட்டங்களின் நிலையையே எடுக்க முனைந்துள்ளன.

முஸ்லிம்கள் இஸ்லாமிய சட்டங்களைப் பற்றிப் பிடித்து வந்த காலம் முழுதும் இஸ்லாம் தன் பொறுப்பை அழகாக நிறைவேற்றி வந்தது. இவர்கள் இஸ்லாமிய திட்டத்தைக் கைவிட்டதும் இவர்களின் முன்னேற்றப் பாதை தவறி விட்டது, அடிமைத்தனம்

(8ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷஹீத் ஸெய்யித் குதுப் (ரஹ்)

— ஷிஹார்

இந்நூற்றாண்டில் உலகளாவிய முறையில் இஸ்லாமிய இயக்கங்களில் தங்களது முத்திரையைப் பதித்தவர்களில் இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்), மௌலானா மௌதூதி (ரஹ்) ஆகியோருக்கு அடுத்த இடத்தை வகிப்பவர் ஷஹீத் ஸெய்யித் குதுப் (ரஹ்) அவர்களாவர்.

அல் பன்னாவையும் மௌதூதியையும் போல இவர் ஓர் இஸ்லாமிய இயக்க ஸ்தாபகரல்ல. ஆனால் 1950 முதல் அல் இக்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் கொள்கைப் பிரசாரப் பகுதியின் பொறுப்பாளராகவும் 1952 முதல் அதன் மாதாந்த சஞ்சிகையான அல் முஸ்லிமூன் இதழின் ஆசிரியராகவும் கடமையாற்றி அல்பன்னாவினால் ஸ்தாபிக்கப்பட்ட இயக்கத்துக்கு புத்துயிரூட்டினார் என்ற பெருமைக்குரியவர்.

இக்காலத்தில் ஸெய்யித் குதுப் எழுதிய 'பீழிலாலில் குர்ஆன்' என்ற தனித்துவம் வாய்ந்த தப்ஸீர், 'ஹாதத்தீன்', 'அல் முஸ்தக்பலு லிஹாதத்தீன்' 'மஆலிமு பித்தரீக்' போன்ற நூல்கள் குறிப்பாக அறபுலகிலும் பொதுவாக உலகெங்கும் வாழும் இஸ்லாமிய உணர்வுள்ள மக்கள் மத்தியிலும் இஸ்லாத்தின் கொள்கை கோட்பாடுகள் அதன் சட்டதிட்டங்கள் என்பன பற்றி புரட்சிகரமான கருத்துக்களை விதைத்ததோடு மனித இனத்துக்கு விமோசனமளிக்கும் வாழ்க்கைத்திட்டம் இஸ்லாம் ஒன்றுமட்டுமே என்ற நம்பிக்கையையும் உறுதிப்படுத்தின.

## ஆசான்கள்

முஸ்லிம்கள் ஏனைய மக்களுக்கு ஆசான்களாக விருக்க வேண்டும் என்பதே இந்தப் பெயரில் ஓர் உம்மத்தை இறைவன் உருவாக்கியதன் நோக்கமாகும். ஆகவே அவர்கள் இஸ்லாமிய அடிப்படைகளின் படி வாழ்ந்து மக்களுக்கு முன்மாதிரியாக வழிகாட்ட அனைத்து வகையிலும் முயற்சிப்பது அவர்களின் கடமையாகும். இதற்குத் தடையாக அமையும் அனைத்துவிதமான தளைகளையும் உடைத்தெறிய ஜிஹாத் செய்வது அவர்களின் தலையாய பணியாகும் என்ற இலட்சிய வாதத்தை நிறுவி வளர்த்தன.

## தவிசிடம்

இதனால் ஸெய்யித் அவர்கள் நவீன காலத்தில் இஸ்லாமிய சிந்தனையாளர்களில் ஒருவராகவும் இஸ்லாத்தை அதன் அசல் உருவில் விளக்கி சுமார் பதினொரு பெறுமதிமிக்க நூல்களை படைத்தளித்த ஒப்பற்ற எழுத்தாளராகவும் விளங்குகிறார். இலக்கியம் கல்வி, அரசியல், பொருளாதாரம் தத்துவம் சமூகவியல் உட்பட பல்வேறு துறைகளிலும் சுமார் 24க்கு அதிகமான நூல்களை அவர் எழுதினார். சிறந்த அறபுக் கவிஞராகவும் விளங்கிய அவருக்கு அறபு இலக்கியத்தில் தனியான இடமுண்டு. தனது சமகாலத்தவர்களான தாஹா ஹுஸைன், அப்பாஸ் மஹ்மூத் அல் அக்காத், முஸ்தபா ஸாதிக் அர்ராபிஈ போன்ற புகழ் பூத்த அறபு இலக்கிய வித்தகர்களில் ஒருவரான ஸெய்யித் அறபு இலக்கியத்தை ஆபாசவியத்தனப் போக்கிலிருந்து இஸ்லாமிய நெறிப் படுத்தியவர் என்ற சிறப்பையும் பெற்றவர்.

## சிறுபிராயம்

ஸெய்யித் குதுப் 1906ல் எகிப்தின் அல் அஸ்யூத் மாகாணத்திலுள்ள ஒரு கிராமத்தில் சமய பக்திமிக்க ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார். எனவே அவர் சின்னஞ்சிறு பிராயத்திலிருந்தே இஸ்லாமிய உணர்வுள்ளவராக வளர்ந்தார். இதில் அவரது தகப்பனுக்குப் போன்ற தாய்க்கும் பெரிய பங்கிருந்தது. அவர் குழந்தை ஸெய்யிதை அழைத்து மகனே அழகாக குர்ஆனை ஓது என்று கூறி பக்கத்திலிருந்து பக்தி சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருப்பது வழக்கமாக விருந்தது. பெற்றோரின் விருப்பத்துக் கேற்ப ஸெய்யிதுக்கு குர்ஆனில் ஈடுபாடு ஏற்பட்டது. பத்துவயதாகும் போது அவர் குர்ஆன் முழுவதையும் மனனஞ் செய்து முடித்தார்.

குழந்தை ஸெய்யித் தனது ஆரம்பக் கல்வியை அவர் பிறந்த கிராமத்துப் பாடசாலையில் கற்றார். அங்கு இடைநிலைக் கல்வியையும் கற்று முடித்த அவர் கெய்ரோ தாருல் உலூம் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அங்கு 1933ல் அறபு மொழி இலக்கியம் கற்று கலைப்பட்டதாரியானார். 'இவர் மட்டுமே எனது மாணவராக விருந்திருந்தாலும் எனக்குத் திருப்தியாக விருந்திருக்கும்' என்று இவரது ஆசிரியர் பாராட்டுமளவு சிறந்த மாணவராக ஸெய்யித் விளங்கினார்.

## எழுத்தும் படிப்பும்

கல்லூரி காலத்திலேயே அவர் எழுத்துத் துறையில் ஆர்வம் காட்டினார். அல் அஹ்ராம், அல்ஹ

(50ம் பக்கத்தில் தொடர்ச்சி)

## இஸ்லாமிய குடும்பம்

# ஆரோக்கியமான குடும்ப அமைப்பு

— மௌலானா மௌதூதி (ரஹ்)

மனித சமுதாய அமைப்பின் முதன்மையானதும் அடிப்படையானதுமான அம்சம் குடும்பம் என்னும் ஸ்தாபனமாகும். ஒரு ஆணினதும், பெண்ணினதும் ஒன்றுபட்ட பிணைப்பினால் குடும்பம் என்னும் கோயில் உருவாக்கப்படுகின்றது. இனி அவ்விருவரினதும் இணைப்பும் - தொடர்பும் நடைமுறைக்கு ஒரு புதிய சந்ததியைத் தோற்றுவிக்கின்றது. அது படிப்படியாக சமுதாய உறவு முறையையும் உருவாக்கி பின்பு ஒரு சமூகமாக வளர்ந்து விடுகின்றது. குடும்பம் என்ற நிறுவனத்தினூடாக ஒரு சந்ததியினர் அடுத்தடுத்து வரும் சந்ததியினரை மனித நாகரீகத்தின் நலனுக்காகவும், சேவைக்காகவும் இன்னும் அவர்களின் சமூக சம்பந்தமான கடமைகளை பக்தி, உண்மை, ஆர்வம், அனுதாபம் என்பனவகளைக் கொண்ட உணர்வோடு நிறைவேற்றுவதற்காகவும் தயார் செய்கின்றனர்.

### சேவகர்

இந்த ஸ்தாபனம் மனித பண்பாட்டின் வளர்ச்சிக்காகவும், நிர்வாகத்திற்காகவும் சேவகர்களை (Cadets) திரட்டும் பணியை வெறுமனே செய்யவில்லை. அவர்களை அதன் காவலர்களாகவும் அது கொள்கின்றது. எதிர் காலத்தில் அந்த ஸ்தாபனத்தை வகிப்பவர்கள் அவர்களை விட மிக்க சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற ஆசை இந்த குடும்ப உறுப்பினர்களின் உள்ளங்களில் இருக்கவேண்டுமென்பதை அவர்கள் மிக்க ஆவலுடன் விரும்புகின்றார்கள். இந்த கோணத்திலிருந்து நோக்கும்போது உலகில் மனித நாகரீகத்தின் விஸ்தீரணம், பலம், அபிவிருத்தி, கட்டுக்கோப்பு, முன்னேற்றம், வளர்ச்சி, என்பனவகளின் அடிப்படைக்கல்லாக விளங்குவது உண்மையில் இந்த குடும்பமே என்று தைரியமாக அழைக்கப்படலாம். எனவே, சமூக பிரச்சினைகளுக்கு மத்தியில் குடும்பம் சம்பந்தப்பட்டத் தொடர்பு முறைகளில் இஸ்லாம் முழு கவனம் செலுத்தி இந்த பிரதான சமூக அங்கத்தைப் பலமான - உறுதியான - திடகாத்திரமான அஸ்திவாரங்களின் மீது நிர்மாணிப்பதற்காகவேண்டி போராடுகின்றது.

### உறவுக்கு வழி

இஸ்லாத்தின் கொள்கைப்படி ஆணுக்கும் பெண்ணுக்குமுரிய உறவு முறைக்கான சரியான அமைப்பு திருமணமே என்பதாகும். அதாவது திருமணத்தின் மூலம்தான் அவ்விருவர்களினதும் முழு சமூகக் கடமைகளும் பொறுப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் விளைவு ஒரு குடும்பமாக மலருகின்றது. கட்டுப்பாடற்ற ஆண் பெண் பாலியல் தொடர்பை வெறும் பொழுதுபோக்காகவோ, சட்டத்தை மீறும் சர்வ சாதாரண செயலாகவோ கருதிவிடவில்லை. இதைவிட சிறிது மேலே சென்று இவை மனித சமுதாயத்தின் அத்திவாரத்தையே வேரறுத்து நாசமாக்கி விடும்போன்றான செயலாகும் என்று இஸ்லாம் கருதுகின்றது. ஆகையால், சட்டவிரோதமான எல்லா வகைப் புறத்திருமண பால் உறவு முறைகளையும் இஸ்லாம் (ஹறாம்) விலக்கப்பட்ட பாவமான காரியம் என்று சொல்வதோடு, சட்டத்தில் அத்தகைய செயலைக் குற்றச் செயலாகவும் ஆக்கிவிடுகின்றது. இத்தகைய (மக்களுக்குக் கேடு விளைவிக்கும்) சமூக விரோதச் செயல்களை சர்வ சாதாரண பழக்கத்தில் வந்து விடாதிருக்கும் பொருட்டு இஸ்லாம் இச்சட்ட விதிகளுக்கு கடுமையான தண்டனையை விதிக்கின்றது. அதே வேளையில் அத்தகைய பொறுப்புணர்ச்சியற்ற சீர்கெட்ட நடத்தைகளைத் தூண்டும் அல்லது அத்தகைய ஒழுக்கக்கேடுகளுக்கு இடம் கொடுத்து சந்தர்ப்பமளிக்கும் எல்லா நடவடிக்கைகளிலிருந்தும் சமூகத்தை தூய்மையாக்கிக் குற்றங்களைப் பரிசுத்தப்படுத்துவதில் குறிக்கோளுடையதாகவும் உள்ளது.

### பாதுகாப்பு

'பர்தா'வின் சட்டதிட்டங்கள், கட்டுப்பாடற்ற ஆண் பெண்களின் கலப்பு உறவுமுறைகளின் மீதான தடை, ஆபாச இசை திரைப்படங்கள் மீதான கட்டுப்பாடு, மானக்கேடான செயல்களின் பரவுதலையும் - பிரச்சாரத்தையும் தடுப்பதற்கான முயற்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி நெறி, ஒழுக்க நெறி என்பவைகளிலிருந்து சில வேளை ஒழுக்க மாறாட்டங்களுக்கான தடை அகில அத்தனையும் தீமை சூழல்கள் உருவாகுவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டே ஏற்பட்டுள்ளன. இவற்றின் முழு நோக்கமும் குடும்ப அத்திவாரத்தைப் பாதுகாத்து பலப்படுத்துவதாகும். இத்தகைய விரும்பத்தக்க சமூக உறவு முறையினை இஸ்லாம் வெறுமனே அனுமதிக்கப்பட்ட ஒரு செயலாக கருதி விடுவதோடு நின்று விடவில்லை. ஆனால் அதை ஒரு உத்தமச் செயலென்று உறுதிப்படுத்திக் கொள்வதோடு உண்மையில் அதை வணக்கமாகவும் கொள்கின்றது. வயது வந்தவர்களின் பிரமச்சரியத்தை (Celibacy)ப் பார்த்துவிட்டு இஸ்லாம் பாராமுகமாக நின்றுவிடவில்லை. ஆனால் அது ஒவ்வொரு இளைஞர்களையும் அவர் அவர்களுக்குரிய காலகட்டத்தில், தங்களுடைய பெற்றோர்கள், தங்களுடைய காலகட்டங்களில் செய்து கொண்டது போன்று திருமண வாழ்க்கையின் மூலம் சமூகப் பொறுப்புணர்ச்சிகளையும் கடமைகளையும் மேற்கொள்ளும்படி அழைப்பு விடுகின்றது.

இஸ்லாம் துறவறத்தையும் நிரந்தர பிரமச்சரியத்தையும் வெறுமனே நல்லொழுக்கச் செயலல்ல என்று கருதுவதோடு மாத்திரம் நின்றுவிடாது. அத்தகைய செயல் ஒழுக்க நீதி நெறிகளுக்கு மாறானவையென்றும் மனிதனின் உண்மையான மனித இயல்பிலிருந்து விலகிச் செல்லும் செயலென்றும், பொறுப்புகளைமீறி இறைவன் வகுத்துள்ள தெய்வீகத் திட்டத்திற்கு எதிரான புரட்சியென்றும் இத்தகைய நடத்தையைக் கொள்கின்றது. இஸ்லாம் மேலும் திருமணத்தை தொல்லை நிறைந்த இக்கட்டான ஒன்றாக ஆக்கிவிடும் சடங்குகள், இசைவுகள் அல்லது கட்டுப்பாடுகள் என்பவைகளைப் பலமாக எதிர்க்கின்றது.

## எளிது

இஸ்லாத்தின் நோக்கம் சமூகத்தில் திருமணம் இலகுவான காரியமொன்றாகவும் கள்ள உறவைக் கொண்ட விபசாரம் கடினமான ஒன்றாகவும் ஆகவேண்டுமேயன்றி மாறுதலையாக இன்று சமூகங்களில் காணப்படுவது போன்று திருமணம் கடினமான ஒன்றாகவும், கள்ள நட்பும் விபச்சாரமும் இலகுவான தொன்றாகவும் ஆகிவிட வேண்டும் என்பதல்ல. ஆகவே, குறிப்பிட்ட ஒரு சில உறவினர்களில் ஒருவரையொருவர் மணஞ்செய்து கொள்வதை தடை செய்துள்ளதோடு மற்றெல்லா இரத்த கிட்டிய சுற்றமும் - புடையும் உள்ள உறவினர்களோடும், நண்பர்களோடும் பந்துக்களோடும் திருமணஞ் செய்துகொள்வதை இஸ்லாம் சட்ட பூர்வமாக்கியுள்ளது. சாதி சமூகம் என்ற வேறுபாடுகளையெல்லாம் களைந்தெறிந்துவிட்டு ஒரு முஸ்லிம் வேறெந்தவொரு முஸ்லிமையும் திருமணம் செய்துகொள்வதை அனுமதித்துள்ளது. இஸ்லாம் 'மஹர்' என்ற 'ஆணி' னால் பெண்ணுக்குக் கொடுக்கப்படும் சீதனத்தை எளிமையாக அமையும் வகையும் குறைந்த தொகையாகச் சட்டமையாக்கியுள்ளது. இதனால் இரு சாராருக்கும் சுமை குறைந்து விடுவதோடு கஷ்டமும் நீங்கிவிடுகிறது. அத்தோடு மதப் போதகர்களினதும், கட்டாய பதிவுக் (Registration) காரியஸ்தர்களினதும் தேவையை அவசியமற்றதாக்கியுள்ளது. ஓர் இஸ்லாமிய சமூகத்தில் இத்தகைய எளிமையான முறையில் அமைந்த திருமண வைபவத்தை ஆண் - பெண் வீட்டைச் சார்ந்த இரு சாட்சிகளின் முன்னிலையில் சாதாரணமாக எந்த இடத்திலும் நடத்தலாம். ஆயினும் இந்தத் திருமண நடவடிக்கைகளை இரகசியப்படுத்தி வைக்காது பகிரங்கப்படுத்தி வைப்பது இதன் நிபந்தனைகளில் ஒன்றாகும். பகிரங்கப்படுத்துவதன் நோக்கம் இந்தத் தம்பதிகள் இருவரும் இல்லற வாழ்க்கை வாழப்போகின்றார்கள் என்பதை சமூகம் அறிய வேண்டும் என்பதற்காகவேயாகும்.

## சமத்துவம்

வீட்டில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவ வேண்டுமென்பதற்காக குடும்பத்தினுள்ளே இஸ்லாம் வீட்டின் நிர்வாகத்தை ஆண் மகனுக்கு அளித்துள்ளது. மனைவி கணவனுக்குக் கீழ்ப்படிந்து பணிவுடன் சென்று வரவேண்டுமென்றும் கணவனுடைய நலத்தையும் சௌகரியத்தையும் பாதுகாக்க வேண்டுமென்றும் குழந்தைகளும் பெற்றோரிடமும் அடக்கமாக நடந்து வரவேண்டுமென்றும் இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்களுக்கும் அவர்களின் சரியான நடத்தைக்கும் ஒழுக்கப் பண்பிற்கும் குறிப்பாக ஒருவரேனும் பொறுப்பில்லாத ஒரு குடும்ப அமைப்பையும், ஒழுங்கு, அடக்கம், கட்டுப்பாடு, அதிகாரம், என்பவைகளிலிருந்து பிரிந்து சிதறிக் கிடக்கின்ற வழுவிழுந்த குடும்ப அமைப்புத் திட்டத்தையும் இஸ்லாம் விரும்புவதில்லை. ஒரு மத்திய நிர்வாக அதிகாரத்தின் மூலமே ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்த முடியும்.

இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் ஒரு தந்தையின் நிலை இத்தகையதே அதுவாகும். இந்த முக்கியமான பொறுப்பையும் கடமையையும் மேற்கொள்ளத் தகுதியான மனிதர் வீட்டில் ஒரு தந்தையே என்றும் அது கூறுகின்றது. ஆனால், குடும்ப விவகாரத்தில் ஆண் தன்புறத்தில் கொடுங்கோலனாகவும், பெண் அவனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு அடிமை நடமாடும் வஸ்து என்று இது பொருள்படாது. இஸ்லாத்தினுடைய மணவாழ்க்கையின் மெய்யான நோக்கம் அன்பும், பரஸ்பர மதிப்பும் தெளிவுமேயாகும். கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியக் குடும்பத்தின் பரப்பு

சமூகத்தின் அத்திவாரமாக அமைவது குடும்பமாகும். ஆரோக்கியமான குடும்பங்களைக் கொண்ட ஒரு சமூகமே உலகில் தலை நிமிர்ந்து வாழும் நிலையைப்பெறும். அதன் உறுப்பினர் பண்பும் பயனும் மிக்கவர்களாகவும் விளங்கி தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் மட்டுமன்றி மற்றவர்களுக்கும் பயனுள்ள மக்களாக வாழ்வார்கள்.

உலக மாந்தர்களுக்கு உதாரண புருஷர்களாகத் திகழும் நோக்குடன் அல்லாஹ் முஸ்லிம் உம்மத்தை அமைத்திருப்பதால் ஒரு சிறந்த உம்மத்துக்கு வேண்டிய பண்புகள் அனைத்தும் கற்றுத் தந்திருக்கிறான். எனவே சமூகத்தின் அத்திவாரமான குடும்ப அமைப்பு சிறப்பதற்கு வேண்டிய அடிப்படையான போதனைகளை மட்டுமன்றி சிறந்த வழிகாட்டும் துணையான காரணிகளையும் அல்குர்ஆனும் ஸுன்னாவும் போதிக்கின்றன.

சமூகம் என்ற முறையில் இஸ்லாத்தின் சிறப்பியல்புகள் பலவற்றுக்கு எடுத்துக்காட்டாக இவ்வுறவு முஸ்லிம் உம்மத் உலகில் பல பகுதிகளிலும் இல்லை. ஆயினும் பெரும்பாலான நாடுகளில் இஸ்லாமிய குடும்பங்கள் ஒப்பு நோக்குகையில் ஓரளவு ஆரோக்கியமானவைகளாக விளங்குகின்றன. இது குடும்ப அமைப்புக்கு இஸ்லாம் இட்டுள்ள பலமான அத்திவாரத்தின் உறுதிப்பாட்டுக்கு ஒரு தக்க சான்றாகும்.

## மூன்று தரங்கள்

இஸ்லாத்தில் குடும்ப அமைப்பு மூன்று தரங்களில் அமைகிறது. ஆரம்ப நிலை இடை நிலை முதிர்ச்சி நிலை என்று அவற்றை நோக்கலாம்.

பெற்றோரும் குழந்தைகளும் என்ற நிலை குடும்பத்தில் ஆரம்ப நிலையாகும். இங்கு அதன் உறுப்பினர்களாக கணவன் மனைவி இவ்விருவருக்கும் பிறந்த குழந்தைகள் என்போர் மட்டுமே விளங்குவர். உறுப்பினர் தொகையில் இதன் பரப்பு சிறியதாயினும் இதுவே பரந்து வளர்ந்து செழிக்க வேண்டிய நடுநிலை, உச்ச நிலை குடும்ப அமைப்புக்கும் அப்பால் சமூக அமைப்புக்குமான முதலாவது அத்திவாரமாகும்.

ஆரம்ப நிலை அல்லது சிறிய குடும்ப அமைப்புக்கு வேண்டிய போதனைகள் கணவன் மனைவி பிள்ளைகள் ஆகியோரின் கடமைகளும் உரிமைகளும் என்ற வகையில் தரப்பட்டுள்ளன. இந்த மூன்று சாராரும் ஒருவர் மற்றவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் உண்டு. மற்றவர்களிடமிருந்து ஒருவருக்கிடைக்க வேண்டிய உரிமைகளும் உண்டு. பெற்றோருக்காக பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகள் குழந்தைகளுக்காக பெற்றோர் செய்ய வேண்டியவை, கணவன் மனைவியர் கடமைகளும் உரிமைகளும், இந்த உறுப்பினர்களிடையே பரஸ்பரம் அன்பும் பாசமும் ஒத்துழைப்பும் நிலவுதல் அவசியம், அதற்கான வழிமுறைகள், குழந்தை வளர்ப்பு அவர்களுக்கு உயர் பண்புகளையும் சமய வாழ்வையும் பயிற்றுவிப்பதற்கான வழிமுறைகள், குடும்பத்தின் பராமரிப்பு அதற்காக காலத்தையும் முயற்சியையும் செலவிடல் பாடுபட்டு உழைத்துப் பணத்தைச் முறையாகச் செலவிடல் அதற்காகக் கிடைக்கும் அளவிடற்கரிய கூலி என்பவற்றை பற்றி இஸ்லாம் விளக்கமான வழிகாட்டுதல்களை தந்துள்ளது.

## இரண்டாம் தரம்

நடுநிலைக் குடும்பம் என்பது மேலே குறிப்பிட்ட குடும்ப உறுப்பினர்களுடன் பெற்றோரின் உறவினர்களையும் உள்ளடக்குவதாக அமையும். பாட்டன், பாட்டி; மாமா, மாமி பெரியப்பா, பெரியம்மா சாச்சா, சாச்சி, இவர்களின் மனைவி, மக்கள் என்போர் இதில் அடங்குவர்.

இவர்களுக்கு அன்புகாட்டுவதும் உடலாலும் பொருளாலும் உதவி ஒத்தாசைகள் செய்வதும் ஸிலதுர் ரஹிம் என்ற உயர் வணக்கமாக அமைகிறது. இந்த உறவு முறை பேணி நடப்பதால் உலகில் பரகத்தும் மறுமையில் இறை திருப்தியும் கிடைக்கின்றன.

இந்த நிலையில் குடும்ப உறுப்பினர்கள் மீதுள்ள கடமைகளையும் அவர்களுக்குரிய உரிமைகளையும் கூட இஸ்லாம் வரையறுத்துக் கூறியிருக்கிறது.

## பரந்த அமைப்பு

ஆரம்ப நடு நிலைக் குடும்ப அமைப்பு சீராக அமையும் போது ஆரோக்கியமான முதிர்ச்சி நிலைக் குடும்ப அமைப்பு உருவாகிறது; இந்த நிலையில் குடும்பத்தின் பரப்பு மிகவும் விரிவடைகிறது; முதலிரு நிலைகளிலும் உள்ள குடும்ப உறுப்பினர்களோடு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த நண்பர்களும் அண்டை அயலாரும் ஏனைய முஸ்லிம்களும் இதில் உறுப்பினர்களாக அடங்குகிறார்கள். இவர்களுக்குரிய கடமைகளும் உரிமைகளும் கூட இஸ்லாத்தில் வரையறை செய்து தரப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முஃமின்கள் யாவரும் சகோதரர்கள் (49: 10) என்ற மறைக் கோட்பாடும், "நீங்கள் அல்லாஹ்வையே வணங்குங்கள்; மற்றெதையும் அவனுக்கு இணையாக்காதீர்கள்; பெற்றோருக்கு நன்றி செய்யுங்கள். உறவினர்களுக்கும் அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் அண்டை வீட்டாரான உறவினர்களுக்கும் உறவினரல்லாத பக்கத்து வீட்டாருக்கும் பிரயாணத் தோழர்களுக்கும் வழிப் போக்கர்களுக்கும் உங்கள் பொறுப்பிலுள்ள அடிமைகளுக்கும் அன்புள்ளவர்களாக நீங்கள் நடந்து கொள்ளுங்கள் (4: 36) என்பதைப் போன்ற அல்குர்ஆன் ஆயத்துக்களும் பல ஹதீஸ்களும் இந்த முதிர்ச்சி நிலைக் குடும்ப அமைப்பு பற்றிக் குறிப்பிடுகின்றன. இவர்களுக்குரிய உரிமைகளையும் கடமைகளையும் அவற்றில் நாம் தெளிவாகக் காண்கிறோம்.

## நம் கடன்

கடந்த காலங்களில் முஸ்லிம்கள் இவற்றைப் பேணி நடந்ததால் உலக மக்கள் பாராட்டும் உன்னதமான குடும்பங்களும் சமூக அமைப்பும் முஸ்லிம்கள் மத்தியில் நிலவியது. இன்று அந்த நிலையில் இல்லாவிட்டாலும் மற்றவர்கள் பெருமையுடன் எடுத்துக்காட்டும் சில பண்புகள் நமது குடும்ப அமைப்பில் காணப்படுகின்றன. அல்ஹம்துலில்லாஹ்.

நாம் விரும்பும் இறையன்பும் இன்ப வாழ்வும் மறுவுலக விமோசனமும் கிட்ட வேண்டுமானால் தனிப்பட்ட முறையில் நல்ல முஸ்லிம்களாக நாம் வாழ்வதோடு நமது குடும்பத்தையும் உண்மையான இஸ்லாமியக் குடும்பமாக மாற்றியமைத்துக் கொள்வது அவசியமாகும்.

ஆகவே நாமும் திருந்தி நம்மைச் சார்ந்த குடும்பங்களும் திருந்தும் முயற்சிகளைத் துரிதமாக மேற்கொள்வோமாக.

"நீங்கள் உங்களுக்குள் அவனைக் கொண்டு ஒருவருக்கொருவர் உங்கள் உரிமைகளைக் கேட்டுக் கொள்ளும் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். இன்னும் உங்கள் இரத்தச் சொந்தத்தையும் பேணுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணித்தவனாகவிருக்கின்றான். (4: 1)

— ஷிஹாப

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை இறுக அணைத்துக் கொண்டது. எனவே இஸ்லாத்துக்கு முன்பு மனிதர் இருந்த இருண்ட நிலைக்கே ஓடோடிப் போய் விட்டார்கள். எனவே மற்றவர்க்குத் தலைவணங்கும் வலுவிழந்த மக்களாய் மாறினார்கள். அநியாயத்தைத் தடுத்துக் கொள்ளவோ எதிரியை எதிர்க்கவோ இவர்களால் எப்படி முடியும்?

## இன்றும் கிடைக்கும்

முந்தைய முஸ்லிம்கள் முற்றாக அல்லாஹ்வை நம்பினார்கள். எனவே அவர்களுக்கு அல்லாஹ் இப்பூவுலகில் வசதிகளைக் கொடுத்தான். சொற்பமான தொகையினருக்கு அவன் அப்படிச் செய்ய முடியுமானால் பெருந்தொகையாகவுள்ள நாம் உண்மை ஈமானை உள்ளங்களில் ஏற்றிக் கொண்டால் எமக்கு ஏன் அருள் செய்யமாட்டான்? அது அவனுடைய வாக்கு. அவன் அதை நிச்சயமாக நிறைவேற்றுவான். இது அல்குர்ஆனின் வாக்கு:

"உங்களில் ஈமான் கொண்டு நல்ல செயல்களில் ஈடுபடுவோரை அவர்களுக்கு முன்பிருந்த நல்லடியார்களை அதிபதிகளாக்கியது போன்று இப்பூவுலகில் அதிபதிகளாக்குவதாகவும், அவன் விரும்பித் தேர்ந்தெடுத்த மார்க்கத்தில் நிலைபெறச் செய்வதாகவும் அவர்களின் அச்சத்தை அமைதியும் பாதுகாப்புமாக நிச்சயம் மாற்றுவதாகவும் அல்லாஹ் வாக்களித்திருக்கிறான்" (24: 55)

"நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்விடமிருந்து பிரகாசமும் தெளிவான வேதமும் வந்திருக்கின்றன. அதனால் அல்லாஹ் தன் திருப்தியைப் பின்பற்றுவோரை சாந்தி வழியில் அவனே வழி நடத்தி இருள்களிலிருந்து வெளியேற்றி பிரகாசத்தின் பக்கம் அவனுடைய அருளால் சேர்ப்பிக்கிறான்; நேர்வழியில் அவர்களைச் சேர்ப்பிக்கிறான்" (5: 15, 16)

- தமிழில் மௌலவி ரூஹுல் ஹக்

அல்குர்ஆன் விளக்க

பயான் நிகழ்ச்சி

பிரதி வாரமும்

வியாழன் மாலை (வெள்ளி இரவு)
7.00 மணி முதல் 8.00 வரை
ஜமாஅதெ இஸ்லாமீ தலைமையகம்
77, தெமட்டகொடை வீதி,
கொழும்பு-9.

அனைவரும் வருக!

## தொல்பொருள் ஆராய்ச்சி

# ஒரு பயனுள்ள முயற்சி

— கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி (பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

அண்மையில் நடந்து முடிந்த இலங்கை தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் நூற்றாண்டு விழாவில் தொல்பொருள் ஆராய்ச்சி பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தை விளக்கி கலாநிதி சுக்ரி அவர்கள் ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்ததை வாசகர் அறிந்திருக்கக்கூடும்.

தொல்பொருள் ஆராய்ச்சியில் முஸ்லிம் ஆய்வாளர்களும் ஈடுபட வேண்டியதன் அவசியம் பற்றி கலாநிதி அவர்கள் அல்ஹஸனாத்துக்கு அளித்த விசேட பேட்டி கீழே இடம்பெறுகிறது. — ஆசிரியர்

● கலாநிதி அவர்களே! அண்மையில் நடந்த தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்கள நூற்றாண்டு விழாவில் நீங்களும் பங்கு பற்றி காத்திரமான பங்களிப்புக்களை வழங்கியதாக அறிந்தோம். அதைப்பற்றி சற்று விளக்கமாகக் கூறுவீர்களா?

● ஆம், மேற்படி நூற்றாண்டு விழாவில் நானும் பங்குபற்றினேன். இரண்டு வருடங்களுக்கு முன் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் இலங்கையின் சில பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட அரபு எழுத்துக்களும் இலக்கங்களும் உள்ள சில கல்லறைக் கற்களை என்னிடம் தந்து அவற்றைப்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தார். தொல்பொருள் ஆராய்ச்சி எனக்குப் பரிச்சயமான துறையல்ல. ஆகவே இத்துறை சார்ந்த பல நூல்களையும் படித்தும், பலருடன் தொடர்பு கொண்டும் ஆராய்ச்சியை மேற்கொண்டு வந்தேன். 1990ல் இலங்கையில் தொல்பொருள் ஆராய்ச்சிப்பணி மேற்கொள்ளப்பட்ட நூறாவது ஆண்டு பூர்த்தியாவதை அதன் நிமித்தம் அரசாங்கம் ஒரு நூற்றாண்டு விழாவை ஏற்பாடு செய்தது. அதில் முஸ்லிம்கள் சார்பில் ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பிக்குமாறு நான் கேட்கப்பட்டேன். எனவே இலங்கையில் தொல்பொருள் ஆராய்ச்சி பற்றியும் இப்பணிபற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் பற்றியும் நான் ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பித்தேன்.

● இத்துறையில் உங்களுக்கு முன் இலங்கை முஸ்லிம்களில் எவரும் காத்திரமான பங்களிப்புக்கள் எதையும் வழங்கியதாகத் தெரியவில்லை. எனவே நீங்கள் அதிக சிரமங்களை எதிர்நோக்க வேண்டியேற்பட்டிருக்குமல்லவா?

● உண்மைதான். இலங்கையில் மட்டுமல்ல அண்மைக் காலம் வரை முஸ்லிம் உலகிலும் இத்துறையில் அதிக அளவு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. பல்வேறு துறைகளையும் பற்றி எழுதிய நமது முன்னோர் இத்துறை பற்றி மிகவும் அரிதாகவே எழுதியிருக்கிறார்கள். அந்த வேளை மற்ற மக்கள் இத்துறை பற்றி நீண்ட காலமாக கவனம் செலுத்தி வந்துள்ளனர். கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக தமது நாட்டில் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் மிகவும் பாராட்டத்தக்கவைகளாகும். ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல பொதுவாக முஸ்லிம் ஆராய்ச்சியாளர்களும் குறிப்பாக இலங்கை முஸ்லிம் அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் அதிக ஈடுபாடு காட்டாத ஒரு துறையில் நான் புதிதாக தன்னந்தனியாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதனால் நான் ஆரம்பத்தில் எதிர்பாராத பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

● முஸ்லிம்கள் இத்துறையில் ஆர்வம் காட்டாமைக்குக் காரணம்?

● முஸ்லிம்கள் இத்துறையில் அடியோடு ஆர்வம் காட்டவில்லை என்று கூறமுடியாது. ஏனைய துறைகளோடு ஒப்பிடும் போது நமது முன்னோரின் இத்துறைப் பங்களிப்பு மிகவும் குறைவானது என்பதே உண்மை. முஸ்லிம் அறிஞர்கள் எழுதிய, குறிப்பாக அறபுமொழியில் எழுதப்பட்ட புராதன நூல்கள் மட்டுமன்றி நவீன காலத்தில் அச்சிடப்பட்ட நூல்களும் மிகக் குறைவாகவே இலங்கையில் கிடைக்கின்றன. அதிலும் இவ்வாறான துறைகளைச் சார்ந்த நூல்கள் கிடைப்பதே இல்லையெனலாம். எனவே தொல்பொருள் ஆராய்ச்சி பற்றிய சில இஸ்லாமிய நூல்கள் கிடைக்குமோ என்று நான் தேடிப்பார்த்தபோது ஒரு சில மட்டுமே எனக்கு இங்கு கிடைத்தன. அதில் குறிப்பாக குர்ஆன் கூறும் இடங்களில் புவியி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யல் வரலாறு பற்றி எழுதப்பட்ட நூலைக் குறிப்பிடலாம். இவற்றைப்படித்த போது சிரமமான இப்பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற எனது துணிவு மேலும் உறுதி பெற்றது. பிர்அவ்னின் உடல் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாகவும். நூஹ் (அலை) அவர்களின் கப்பல், ஆத் ஸமூத் போன்ற இனங்களின் வரலாறு, அழிந்துவிட்ட வேறு பல நாகரீகங்களும் அவற்றின் சின்னங்களும், நபிமார்களின் வரலாறு, அவர்கள் விட்டுச் சென்ற சான்றுகள் என்பவைப் பற்றிக் கூறும் அல்குர்ஆன், இவற்றைப்பற்றிச் சிந்திக்கவேண்டும்; இவற்றிலிருந்து படிப்பினை பெற வேண்டும் என்று கூறுகிறது. இதனால் இத்துறையில் ஆராய்ச்சி செய்வது ஒரு பாராட்டத்தக்க முயற்சி என்றதீர்மானத்துக்கு நான் வந்தேன்.

- தொல் பொருள் ஆராய்ச்சி பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் என்ற தலைப்பில் நீங்கள் ஆய்வுரைக் கட்டுரை சமர்ப்பித்ததாகக் கூறினீர்கள். இதுபற்றி உங்கள் முடிவு என்ன?

- இஃதும் இஸ்லாத்தின் தனியான பங்களிப்பு என்று நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். சுருக்கமாகக் கூறுவதாயின் மற்ற இனத்தவர்கள் யாவரும், தோன்றி மறைந்த பொருள்களைப்பற்றியும் அவற்றின் தன்மைகளைப் பற்றியுமே ஆழமாக ஆராய்ந்துள்ளார்கள். இஸ்லாம் இவற்றைப் புறக்கணிக்கவில்லை; இவற்றோடு கூடவே நாகரிகம் எப்போது பயன் தந்தது அவை அழிந்தமைக்கான காரணம் யாது என்ற விஷயத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. கடந்த காலங்களில் காணப்பட்ட பொருட்களையும் கலாசார பண்பாடுகளையும் ஆராயும் மக்கள், அவற்றின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமான காரணங்களை நன்கு உணர்ந்து தங்களின் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றே இஸ்லாம் போதிக்கிறது.

- நாற்றாண்டு விழா முடிந்து விட்டது. இப்போது இத்துறையில் உங்களுடைய ஆராய்ச்சிகளையும் முடித்துக் கொண்டுவிட்டீர்களா?

- இல்லை; எனது அண்மைக்கால ஆராய்ச்சிகள் எனது ஆராய்ச்சிப் பணியில் புதிய பல முயற்சிகளுக்கு வழியைத் திறந்து விட்டுள்ளது என லாம். இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் அமெரிக்காவில் நடக்கவிருக்கும் முஸ்லிம் சமூக இயல் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக் கருத்தரங்கிலும் தொல்பொருள் ஆராய்ச்சி பற்றிய இஸ்லாமியக் கருத்தை விளக்கும் விரிவான ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பிக்க விருக்கிறேன். 'இன்ஷா அல்லாஹ்'. கட்டுரையின் சுருக்கத்தை அனுப்பினேன். அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் பின்னரும் தொடர்ந்து இத்துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டிய தேவையிருக்கிறது.

- அது ஏன்?

- இதுவரை எனக்குக்கிடைத்த கல்வெட்டுக்கள், கல்லறைகளுக்கள் பள்ளி முகப்புப்படங்கள் என்பன பல சுவையான பயனுள்ள தகவல்களைக் கொண்டவை. உதாரணமாக திருமலையில் கிடைத்த ஒரு கல்லறைக் கற்களில் அங்கு அடக்கஞ் செய்யப்பட்டவர் ஹலவி, ஸாரியாவில் உள்ள ஒரு நகரைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு ஒன்றில் ஒருவரின் பெயரின் முன்னால் 'காழி' (நீதிபதி) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விதமான சொத்துகளை நாம் ஆராயும்போது இலங்கைக்கும் அறபு மக்களுக்குமிடையில் நிலவிய சமூகப் பண்பாடு உறவு பற்றியும், இங்கு வாழ்ந்த முஸ்லிம்களின் கலாசார தனித்துவம் பற்றியும் பல உண்மைகளை நாம் தெரிந்து கொள்ளமுடியும். அதே வேளை இவ்விதமான விளக்கங்கள் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் எழுதப்பட்டுள்ள உண்மைகளுக்கு யதார்த்தமான உருவத்தைக் கொடுத்து அவற்றை மேலும் ஊர்ஜிதம் செய்கின்றன. இது மிகவும் முக்கிய ஓர் அம்சமாகும்.

அதுமட்டுமல்ல. தொல்பொருள் ஆராய்ச்சிக்கான பொருட்கள், கற்களும் கட்டடங்களும், பட்டயங்களும் இவை போன்றவையும் மட்டுமல்ல. பழைய நூல்கள் எழுத்துச் சுவடிகள் என்பன போன்றவைகளும் கூட இதற்குப் பயன்படுகின்றன. இவற்றையெல்லாம் ஆராயும் போது ஏற்கனவே தெரிந்த பல உண்மைகள் மேலும் உறுதிப்படுத்தப்படுவதோடு புதிதாக பல வரலாற்றுச் சான்றுகளும் கிடைக்கின்றன. இதனால் நமது சந்ததியினர் தங்கள் பழைமை பற்றிப் பெருமைப்பட முடியும். துணிவு பிறக்கும். இன்று வாழும் மற்ற இனத்தவர்கள் தமது வரலாறு, கலாசார நாகரிகம், பங்களிப்புக்கள் என்பவற்றை திறமை ஆதாரமாக இவற்றைக் கொள்ளும் போது நாம் மட்டும் இவற்றைப் புறக்கணிப்பது தகாது. இந்த வகையிலும் இவ்விதஆராய்ச்சி முக்கியத்துவம் வாய்ந்தது எனலாம்.

- கலாநிதியவர்களே, உங்களது கருத்துக்களிலிருந்து இவ்வித ஆராய்ச்சியின் பயன்கள் நன்கு விளங்குகின்றன. எனவே இத்துறையில் நமது சமூகத்தவர்களிடம் நீங்கள் எதிர்பார்ப்பது என்ன?

- படித்தவர்களில் இத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் தங்களது பங்களிப்பை வழங்க முன் வர

(தொடர்ச்சி 33ம் பக்கத்தில் பார்க்க)

# இஸ்லாமிய அடிப்படைவாதம்!

# இஸ்லாமிய தீவிரவாதம்!

# இஸ்லாமிய இனவாதம்!

எதிரிகளின் கூச்சல்! | முஸ்லிம்களும் பலி!

"மதம் வேறு- அரசியல் வேறு; மதம் வேறு வாழ்க்கை வேறு; மதம் மனிதனின் தனிப்பட்ட விவகாரம் அதனை அன்றாட வாழ்வு மார்க்க அம்சங்களுடன் கலக்கக் கூடாது!"

இதுதான் மதம் பற்றி மேற்குலக நாடுகள் கொண்டுள்ள கருத்தாகும். இக்கருத்துக்களையே அந்நாடுகளில் பின்பற்றுப்படும் முதலாளித்துவ, ஜனநாயகக் கொள்கைகளும் நெறிப்படுத்தப்பட்டுள்ளன.

இக்கருத்து அந்நாடுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை, மாறாக கம்யூனிஸ, தேசியவாத கொள்கைகளைப் பின்பற்றும் நாடுகளுக்கும், இன்னும் பலவற்றுக்கும் அது ஏற்புடையதாகியது. இன்று உலகமே அதன் வழியில் செல்வதைக் காண முடிகிறது.

பல மதங்களுக்கிடையே அடிப்படை நம்பிக்கை, நடைமுறை சார்ந்த வேற்றுமைகள் இருப்பது யாவரும் அறிந்ததே. எனினும், எல்லா மதங்களும் 'ஆண்-பெண் உறவில் ஒழுக்கம் வேண்டும்' என்பதில் பொதுவான கருத்தை கொண்டுள்ளன; கொலை, கொள்ளை, குடி, மதுபானம் போன்றவை தீயவை என்ற கருத்தை ஏற்றுள்ளன.

எனவே, 'அரசியலில், வாழ்வில் மதம் வேண்டாம்' என்றபோது மதத்தின் வழியிலான மேற்கூறிய நல்லம்சங்களும் 'வேண்டாம்' என்ற நிலை உருவாகுவதை தவிர்க்க முடியாததே. அந்த நிலைமை இக்கருத்தைப் பின்பற்றும் சகல நாடுகளிலும் காணக் கூடியதாய் இருக்கிறது. சில நாடுகள் தீமையின் மொத்த உருவமாகக் கூட காட்சி தருகின்றன.

இந்தத் தாழ்ந்த நிலைக்கு அந்தந்த நாடுகளில் உள்ள மதங்களின் பூரணத்துவமற்ற தன்மையும் பலவீனமான வழிநடத்தல் முறையும் பிரதான காரணங்களாகக் கொள்ளலாம்.

## தோற்றுவாய்

எனினும், எல்லா வகையிலும் பூரணத்துவம் பெற்ற, பரிட்சித்து வெற்றிகண்ட வாழ்க்கை முறையான, இஸ்லாத்தை ஏற்ற நாடுகளிலும் இந்நோய் பரவியதுதான் ஆச்சரியமும் அதிசயமுமாக இருக்கின்றன. மேற்குலகக் கல்விக் கூடங்களில் படித்து பட்டம் பெற்ற 'முஸ்லிம் துரைமார்' மூலம்தான் இக்கருத்து இஸ்லாமிய உலகுக்கு இறக்குமதி செய்யப்பட்டது என்பது மறுக்க முடியாது.

இதன் காரணமாக இஸ்லாத்தை அரசியல், பொருளாதார, சமூகவியல் துறைகளிலிருந்தும் வாழ்வின் பல அம்சங்களில் இருந்தும் ஒதுக்கிவிடும் முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. இஸ்லாம் என்றால் சில வணக்க வழிபாடுகள், சம்பிரதாய சடங்குகள், சிற்சில ஒழுக்க விதிகள் ஆகியவை மாத்திரமே 'ஜிஹாத் என்பது ஜனாப் நபிகள் காலத்துடன் முடிந்து விட்டது' என கற்பித்த சில உலமாக்களே தமது பிரசங்கப் பிரசங்கங்களில் ஒலிபரப்புவதை அவதானிக்க முடிகிறது. 'உங்களுக்கு ஏது நடந்தாலும் தொழுதுவிட்டு துஆப் பிரார்த்தனை செய்யுங்கள். அவ்வளவுதான் நம்மால் முடிந்தது' என மேடைகளில் முழங்குவதும் சர்வசாதாரணமாகி விட்டது.

இப்படி, முஸ்லிம்கள் இஸ்லாத்தைப் பொது வாழ்விலிருந்து ஒதுக்கி, பள்ளிவாயல்களுக்குள் சிறைப்படுத்திய போது, சில சம்பிரதாய சடங்குகளுடன் வரையறுத்து விட்டபோது இஸ்லாத்தின் எதிரிகளுக்கு ஏற்பட்ட சந்தோசத்திற்கு அளவேயில்லை; ஜனநாயக, முதலாளித்துவ, சோஷலிசக் கொள்கைகளுக்கு உயிர் உடைமைகளை அர்ப்பணித்து, கொடி தூக்கி, பிடிச்சோற்றுக்கு மடிவை விரித்த ஈனச்சவேலை செய்யப்பட்ட மடையர்கள் அடைந்த ஆவலைக்கும் அளவேயில்லை.

## தடுப்பு முயற்சி

இந்நிலையில் இஸ்லாமியக் கொடியை ஏந்திய சிந்தனையாளர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் தோன்றலாயினர். இஸ்லாத்தை தன்னிகரற்ற தொரு சக்தியாக எடுத்துக் காண்பித்து அநீதி, அக்கிரமம், அடக்குமுறை, ஒழுக்கக்கேடு போன்ற பல தீமைகளுக்கு எதிராக அணிசேர்ந்து போராடினர். எங்களுக்குக் கிழக்கும் வேண்டாம்; மேற்கும் வேண்டாம்; இஸ்லாமே வேண்டும்' என்ற கருத்தை சத்தியத்தை விரும்பும் சகல மக்களதும் நாதமாக மாற்றினர்.

அதன் விளைவாக எங்கெல்லாம் முஸ்லிம்கள் வாழ்கின்றனரோ அங்கெல்லாம் இஸ்லாமிய எழுச்

சிக்குரல் ஒலிக்கலாயிற்று; அடிமைத்துவ சங்கிலியை அறுத்தெறிந்துவிட்டு அல்லாஹ்வின் சட்டத்தை பின் பற்றி வாழும் உணர்வுகள் பெருகலாயிற்று.

## சதி

இதனை கண்ட இஸ்லாத்தின் எதிரிகள், மேற் கத்திய சிந்தனையில் ஊறிய மரமண்டைகள், முத லாளித்துவ, கம்யூனிச வல்லரசுகள் கிலி பிடித்து நடு நடுங்கிக் காட்டுக் கூச்சல் போட ஆரம்பித்துவிட்டன.

''இஸ்லாமிய அடிப்படைவாதம் (Islamic Fundamentalism- [illegible]) தலை தூக்குகிறது; இஸ்லாமிய மத வெறியர் (Islamic Extremists) மக்களை பழமைவாதப்பால் இட்டுச் செல்ல முயலுகின் றனர்; இஸ்லாமிய இனவாதம் (Islamic Communalism) பல சமூக இணக்கத்தை சிதைக்க வருகிறது!'' என் றெல்லாம் அக்கூச்சல்கள் அகில உலகெங்கும் ஒலித்தன.

கட்டுக் கதைகள், கற்பனைகளிலிருந்து விடுபட்டு இஸ்லாத்தை இஸ்லாமாக - குர்ஆன் ஸுன்னா ஆகிய வற்றுக்கேற்ப வாழ்வின் சகல துறைகளிலும் பின்பற்ற முனையும் பொழுது, உலகை ஆளும் தகுதி இஸ்லாத் திற்கே உண்டு என்றுகூறி அதன் அடிப்படையில் திட்டமிட்டு ஆக்கப்பணிகளில் ஈடுபடும் பொழுது, இஸ்லாத்தின் எதிரிகள் ஈன ஓலமிடுகின்றனர்.

காரணம் என்னவெனில், இஸ்லாம் அதன் அசல் வடிவில் எழுச்சியுற்று உலகை ஆட்கொள்ள விளைந் தால் இந்த எதிரிகளின் சுரண்டல்கள், சதிகள், எல் லாம் அம்பலத்திற்கு வந்துவிடும்; சுகபோக வாழ்வு சீர்குலைந்து விடும்; ஆட்சியும் அதிகாரமும் பறிக்கப் பட்டு விடும் என்பவற்றை அவர்கள் நன்கு அறி வர். எனவே, அச்சம் கொண்டு ஓலமிடுகின்றனர்.

அவ்வாறு அவர்கள் ஓலமிடுவதற்கு அந்தரங்க காரணங்கள் உண்டு. ஆனால் முஸ்லிம்களுள் சிலரும் இஸ்லாத்தின் எழுச்சிகண்டு, எதிரிகளின் ஓலத்தைத் ராகம் தவறாது பெருங்குரலில் இசைப்பதன் அர்த் தம்தான் என்ன?

## முன்மாதிரி

றஸூல் (ஸல்) அவர்களைப் பாருங்கள்! அவர் கள் ஆட்சியை அபூஜஹ்லிடம் கொடுத்துவிட்டு அவ னுக்கு அடங்கி நடந்தார்களா? பள்ளிக்கு வெளியே யுள்ள வாழ்வை சீர்செய்யும் பணியை பாதை தவறி யவரிடம் கொடுத்துவிட்டு அவர்கள் பள்ளிக்குள்ளே யுள்ள கடமைகளை மட்டும் செய்தார்களா? நபிக ளாருக்கும் ஸஹாபாத் தோழர்களுக்கும் உயிராபத்து வந்தபொழுது, அவர்களது உடைமைகள் நாசமாக் கப்பட்டபொழுது, அந்த நிலைமையை எதிர்கொண்டு நடவடிக்கை எடுக்காது, பயந்து பதுங்கி ஒழிந்து கொண்டார்களா? இல்லையே!

மாறாக, றஸூல் (ஸல்) அவர்கள் எந்த அல் லாஹ்வை கால்கடுக்கத் தொழுதார்களோ, அந்த அல்லாஹ் காட்டிய வழிமுறைகளுக்கமைய, பல போராட்டங்கள் செய்து சீரான வாழ்வு கொண்ட மனிதர்களையுடைய சமூக அமைப்பொன்றையே நிறுவினார்கள்.

இந்த வழிமுறையை இன்றும், இனியும் பின்பற் றுவது முஸ்லிம்களது நீங்காத கடமை - என்பதை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும்.

எனவே, இஸ்லாத்தின் எதிரிகள், ''அடிப்படை வாதிகள், மத வெறியர்கள், இனவாதிகள்'' எனக் கூறி இஸ்லாத்தின் அசல் வடிவை பின்பற்ற முனை யும் உங்களுக்குக் களங்கம் கற்பிக்க வரும்போது ஏமாந்து விடாதீர்கள். குர்ஆனை விளங்குங்கள்; றஸூல் (ஸல்) அவர்களின் வாழ்வைப் படியுங்கள்; ஸஹாபாக்களின் முயற்சிகளை சரியான வரலாற்று ஒளியில் தெரிந்து கொள்ளுங்கள்.

அப்பொழுது உங்கள் கடமை எது என நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள்.

— 'அபூ ரம்ஸி'


உங்களுக்கு தேவையான

அனைத்து இஸ்லாமிய நூல்களுக்கும்

தலைநகரில் நீங்கள் நாட வேண்டிய இடம்:

ஜமாஅதே இஸ்லாமி புத்தக நிலையம்

77, தெமட்டகொடை வீதி,
கொழும்பு-9.

"சமரசம்"

தமிழ் நாட்டிலிருந்து
இரு வாரங்களுக்கு
ஒருமுறை வருகிறது.
விலை ரூபா: 10.00

விபரங்களுக்கு
ஜமாஅதே இஸ்லாமிய
புத்தகசாலை
77, தெமட்டகொடை வீதி,
கொழும்பு-9.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவில் கம்யூனிஸம் கருகி இஸ்லாம் மலர்கிறது

● மூலம் ஆனந்த குணதிலக்க
● தமிழில் எஸ். எம். மன்சூர்

சோவியத் ரஷ்யா பல கூறுகளாக வெடிப்புற்று இருப்பது எவருக்கும் தெளிவானதாகும். இவ்வாறு கூறுவதைவிட, 'அது அழிவின் விளிம்பில் துண்டு துண்டாக உடைந்து சிதைவுறும் அபாயத்தை எதிர்நோக்கி நிற்கின்றது' எனக் கூறுவதே மிகப் பொருத்தம்.

15 குடியரசுகளை உள்ளடக்கிய சோவியத் சோஷலிச ஒன்றியம், உலகின் ஆறில் ஒரு பங்கு விஸ்தீரணத்தைக் கொண்டது. இன்றும் அதன் மத்திய நிர்வாகத்தின் கீழ் ஒருவகையான ஒருமைப்பாட்டுடன் அது இருக்கிறது என்றால் கே. ஜி. பி. உளவு ஸ்தாபனத்தினதும் ஆயுதப் படையினதும் நெருக்குதல், பொருளாதாரத் தடைகள், அரசியல் அழுத்தங்கள், அரசுத் தந்திரங்கள் ஆகியவற்றின் மூலமே அது சாத்தியமாகியுள்ளது.

1917ல் லெனினின் தலைமையில் நடைபெற்ற புரட்சியின் மூலம் சோவியத் ரஷ்யா பிறந்தது. அதன் பின் 1924ல் முதல் 53 வரை ஸ்டாலினின் தலைமையில் பல்வேறு இனத்தவர், மதத்தவர்களால் ஆன குடியரசுகள் ஒன்றிணைக்கப்பட்டு பாரிய சோவியத் ஒன்றியம் கட்டியெழுப்பப்பட்டது. இன்று கொர்பச்சோவின் யுகத்தில் அது சரிந்து வீழ்ந்து சுக்குநூறாகும் பரிதாப நிலைமையை எதிர்நோக்கி நிற்கின்றது.

இதுகாலவரை சோவியத் ஒன்றியத்தின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்தது பால்டிக் குடியரசுகளில் எழுச்சியுற்றுவந்த தேசிய உணர்வேயாகும். ஆனால், தற்போது மற்றொரு பாரிய அச்சுறுத்தல் சோவியத்தின் சகல பிரதேசங்களிலும் ஊடுருவி வருகின்றது. அதுதான் இஸ்லாமிய மூலக் கோட்பாடுகளுடன் கூடிய எழுச்சியாகும். இது உண்மையில் ஒரு சாதாரண அச்சுறுத்தல் என்றோ சவால் என்றோ கொள்ள முடியாது. மாறாக சோவியத் ரஷ்யாவின் முழு ஆசியப் பிரதேசத்திலும் வேரூன்றி வளர்ந்து வரும் மத ரீதியானதோர் உணர்வாகும்.

இஸ்லாம் அதன் அசல் வடிவில் உயிர்பெற்று வரும் பிரதேசம் கஸாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கீஸ், அஸர்பைஜான், தாஜிகிஸ்தான், துர்க்மேனியா ஆகிய குடியரசுகளை உள்ளடக்கி நிற்கின்றது. அஷ்காபாத், தாஷ்கந்த், சமர்கந்த், புகாரா போன்ற வரலாற்றுப் பெருமைமிக்க பெருநகரங்கள் இக்குடியரசுகளிலேயே உள்ளன.

இஸ்லாமிய எழுச்சியின் கேந்திர நிலையமாகத் திகழ்வது துருக்கி மொழி பேசும் முஸ்லிம்களின் தாய்பூமியாகும். அவர்கள் 01 கோடி 90 லட்சம் மக்களைக் கொண்ட உஸ்பெகிஸ்தானில் 89% வீதமாகவும், 45 லட்சம் மக்களையுடைய கிர்கீஸில் 12% வீதமாகவும், 48 லட்சம் மக்களையுடைய தாஜிகிஸ்தானில் 23% வீதமாகவும், 34 லட்சம் மக்களையுடைய துர்க்மேனியாவில் 9% வீதமாகவும் இருக்கின்றனர். இவர்கள் சோவியத்தில் வாழும் ரஷ்யர்களுக்கு அடுத்த பெரும்பான்மை இனமாகும். இவர்களது உந்துதலினால் அக்குடியரசுகளில் வாழும் ஏனைய மொழி பேசும் முஸ்லிம்களும் இஸ்லாத்தின் எழுச்சிப் பாதையில் அணி சேர்ந்துள்ளனர்.

சோவியத் ஒன்றியத்தில் உள்ள ஒரேயொரு அரபுக் கலாசாலை புகாராவில் அமைந்துள்ளது. சுமார் 500 வருடங்கள் பழமைமிக்க இக்கலாசாலையில் 125 மாணவர்கள் மார்க்கக் கல்வி பயில்கின்றனர். எனினும், தற்போது நிலைமை மாறி வருகின்றது. பல புதிய இஸ்லாமியக் கல்விக் கூடங்கள் உருவாகி வருகின்றன; பல புதிய பள்ளிவாசல்கள் தோற்றம் பெறுகின்றன. அவை தொழுகைக்கு வருபவர்களால் நிறைந்து காணப்படுகின்றன.

சோவியத் முஸ்லிம்களின் இளைய தலைமுறையினர் இவ்வாறு இஸ்லாமிய உணர்வுடன் செயற்படுவதன் மூலம் 1917ல் இடம்பெற்ற புரட்சிக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் முதற் தடவையாக தம் கரங்களுக்கும் ஆட்சியுரிமை எட்டுவதை உணரத் தொடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய இந்த இஸ்லாமிய எழுச்சி நிச்சயமாக சோவியத் தலைமைக்கும், அரசியல், கலாசார பண்பாடுகளுக்கும் பெரும் சவாலாக அமையும் என்பதில் ஐயமேயில்லை.

உஸ்பெகிஸ்தானில் உள்ள புகாரா நகர் மத்திய காலத்தில் ஆசியாவின் இஸ்லாமிய கேந்திரஸ்தானமாகத் திகழ்ந்தது என குறிப்பிடலாம். அப்போது அந்நகரில் 113 அறபுக் கல்லூரிகளும், 360 பள்ளிவாயல்களும் இருந்தன. முஹம்மத் (ஸல்) அவர்களின் பல உதவியாளர்களது அடக்கஸ்தலங்கள் அந்நகரை அலங்கரித்துள்ளன.

ஆனால் 1917க்குப் பின் இந்நிலை மாறியது. அங்கு மூன்று பள்ளிவாயல்கள், ஓர் அறபுக் கல்லூரி எனுமளவிற்கு அவை குறைக்கப்பட்டன. எனினும் கடந்த 5 ஆண்டுகளுக்குள் 15 புதிய பள்ளிவாயல்கள் திறக்கப்பட்டன. பழைய வழிபாட்டுத் தலங்களையும் புதுப்பிக்கும்படி கம்யூனிஸ்ட் கட்சி உத்தரவிட்டுள்ளது. அவைகளில் பெருந் திரளான முஸ்லிம்கள் தமது வழிபாடுகளை மேற்கொள்கின்றனர்.

அண்மையில், ஃபார் ஈஸ்டன் எக்கொனொமிக் ரிவீவ்' எனும் சஞ்சிகையின் நிருபரொருவர் புகாராவில் உள்ள அறபுக் கல்லூரி ஒன்றிற்கு விஜயம் செய்தார். அவ்வமயம் அவரை அணுகிய மாணவர்கள் சோவியத்துக்கு வெளியேயுள்ள இஸ்லாமிய அடிப்படைவாதம், ஈரானிய புரட்சி, ஆப்கன் முஜாஹிதீன்கள் பற்றியெல்லாம் கேள்வி தொடுத்துள்ளனர். அக்கல்லூரியின் அதிபர் மௌலானா முக்தார் ஜான் அஸர்கன் அந்த நிருபரிடம் பேசும்போது, "சோவியத் ரஷ்யா தனது அரசியல் அதிகார பலத்தைக் கொண்டு சதாகாலமும் இஸ்லாத்தை அடக்கி ஒடுக்கி வந்துள்ளது. என்றாலும் இப்போது இளைய தலைமுறையினர் அதனை வித்தியாசமாக நோக்கத் தலைப்பட்டு விட்டனர்" எனக் கூறினார்.

சோவியத்தின் மத்திய ஆசியப் பிரதேசத்தில் அமைந்துள்ள பள்ளிவாயல்கள் மீண்டும் அரசியல் ஆலோசனை கூடங்களாகவும் அமையப்பெற்று வருகின்றன. கஸாகிஸ்தானின் தலைநகரான அல்மா அட்டாவில், ஒரு வெள்ளியன்று, ஜும்ஆத் தொழுகையின் பின், அரச அனுமதி பெறாது பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை ஒன்றின் பிரதிகளை சில இளைஞர்கள் தொழுகைக்கு வந்தோரிடையே பகிர்ந்தளித்தனர். சோவியத்தில் மாத்திரமன்றி சீனாவிலும் வாழும் துருக்கி மொழி பேசுபவர்கள் ஒன்றிணைந்து 'துர்கிஸ்தான்' இஸ்லாமியக் குடியரசொன்றை அமைக்க முன்வருதல் அவசியம்" என்பது அதன் முக்கிய செய்தியாக இருந்தது. இச்செய்தி பற்றி முஸ்லிம்களுள் பலரும் பல மணிநேரம் பள்ளிவாயலில் கூடி அவ்விளைஞருடன் உரையாடினர். இத்தச் செய்தி மற்றொரு ரகசியத் திட்டத்தின் ஆரம்பமாகும். மிகயில் கொர்பசேவின் 'பெரஸ்ட்ரொய்கா' எனும் சீர்திருத்த முயற்சிகளின் பின்னர் இத்தகைய செயற்பாடுகள் சோவியத்தின் மத்திய ஆசியாவெங்கும் இடம்பெறுகின்றன.

சென்ற ஜனவரி வரை, தாஷ்கந்தில் அமைந்துள்ள 'தொஞ்சல்' எனும் நிறுவனமே சோவியத் ஒன்றியத்தின் இஸ்லாமிய விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்தது. எனினும், கஸாகிஸ்தானின் ரத்பெக் நிஸான்பாய் என்ற இஸ்லாமிய அறிஞர் மத விவகாரங்களுக்குப் பொறுப்பான தலைமையை ஏற்றபின் தாஷ்கந்தின் 'தொஞ்சல்' நிறுவனத்திற்கு சவாலான நிலை உருவாகத் தொடங்கியது. நிஸான்பாய் கஸாகிஸ்தான் பிரதிநிதிகள் சபையின் ஓர் உறுப்பினராவார். சூழல் பாதுகாப்பு, இரசாயன அணுகுண்டுப் பரிசோதனைகள் ஆகியவற்றுக்கு எதிரான செயற்பாடுகள் மூலம் மக்களிடம் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழும் அவர், மிக விரைவில் கஸாகிஸ்தானின் முதலாவது அறபுக் கல்லூரியை ஆரம்பிக்கவுள்ளார். அத்துடன் குர்ஆனை கஸாகிஸ்தான் மொழியில் பெயர்க்கவும், இஸ்லாமியப் பத்திரிகை ஒன்று தொடங்கவும் அவசியமான ஆக்கப்பணிகளில் அவர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். கடந்த 5 வருடங்களுள் அவர் 27 பள்ளிவாயல்களை உருவாக்கியுள்ளார். இப்போது கஸாகிஸ்தானில் 90 பள்ளிவாயல்கள் இருக்கின்றன. கொர்பச்சேவின் மறுசீரமைப்புக் கொள்கை அமுலாக்கக் காலத்தை இஸ்லாத்துக்குப் பயன் தரும் வகையில் பயன்படுத்திக் கொள்வதே அவரது நோக்கமாகும்.

இதே வேளை, தாஷ்கந்தில் இருக்கும் முஹம்மத் ஸாதிக் என்ற இஸ்லாமிய அறிஞரும் தமது அதிகாரங்களை பலப்படுத்தி வருகிறார். தினமும் புதுப்புது பள்ளிவாயல்கள் தோன்றுவதாகக் கூறும் அவர், தாஷ்கந்தில் சுமார் 60 பள்ளிவாயல்கள் தோன்றுவதற்குக் காரணமானவராகத் திகழ்கிறார். அவரது தலைமையில் உள்ள இஸ்லாமிய அறிஞர் குழு கடந்த வருடம் மட்டும் ஆறு முறை ஜனாதிபதி கொர்பச்சேவை சந்தித்து இஸ்லாமிய விவகாரங்கள் குறித்து அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

உஸ்பெகிஸ்தானின் பிரதான அரசியல் எதிர்நிலை நிறுவனமான 'பிர்லிக்' மத்திய ஆசிய முஸ்லிம்கள் ஒருங்கிணைந்த இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் ஒன்றின் தேவைபற்றி குரல் எழுப்பி வருகின்றது. மாஸ்கோ அதிகாரபீடத்திலிருந்து முஸ்லிம்கள் அரசியல், பொருளாதார சுதந்திரம் பெறுவது அவசியம் என்பதும் அதன் பிரதான கோரிக்கைகளுள் ஒன்றாகும். அந்த நிறுவனத்தின் தலைவர் அதிலோவ் மிரஸாம், "மாஸ்கோ அதிகாரபீடம் எம்மை அடிமைகளாகவே நடத்துகிறது. சோவியத் ஒன்றியத்தின் ஏழ்மைமிக்கக் குடியரசு நமது உஸ்பெகிஸ்தானே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலிலும் இயற்கை வளங்கள் நிறைந்த குடியரசும் இதுதான். மாஸ்கோ ஆட்சியாளர் அந்த இயற்கை செல்வங்களை எம்மிடமிருந்து சுரண்டிச் செல்கின்றனர்)'' எனக் கூறுவதிலிருந்து அவர்களது விடுதலை உணர்வின் தன்மையை கணிக்க முடிகிறது.

உஸ்பெகிஸ்தானில் வாழும் ரஷ்யர், அங்குள்ள சனத்தொகையில் 11% வீதம். அவர்களுடைய அங்கு நிலவும் சுதந்திர வேட்கையின் நடவடிக்கைகளைக் கண்டு அச்சம் கொண்டு அக்குடியரசை விட்டு வெளியேறுகின்றனர். அதேவேளை, இஸ்லாமிய உணர்வு மிக்க உஸ்பெக் முஸ்லிம்கள் வெளிநாடுகளிலுள்ள முஸ்லிம் உலகத்துடன் தொடர்புகொள்ள ஆவல் கொண்டுள்ளனர். அரபு நாடுகளில் வேகமாக பரவிவரும் இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தை அவர்கள் உவமைப்பாக அறிந்துகொள்கின்றனர்? ஈரானிய, சவூதி அரேபிய அமைப்பிலான ஆட்சி முறை பற்றி அவர்களுக்குக் கிடைக்கும் தகவல்கள் போதாது. இதன் காரணமாக சில கல்விமான்கள் இஸ்லாமியத் தலைவர் நிலைக்கான இஸ்லாமிய உலகுடனான சுதந்திரமான உறவும், போக்குவரத்தும் அவசியம் என வலியுறுத்தி வருகின்றனர்.

இத்தகைய சுதந்திரமான உறவுகள் உருவாக அனுமதி வழங்கினால், சிதைவு அடைந்துவரும் சோவியத் ரஷ்யாவுக்கு அது பயனுடையதாக அமையுமா? அத்தகைய உறவுகள் உருவானால் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் அடுத்த நடவடிக்கை எதுவாக இருக்கும்? என்பன சிந்திக்க வேண்டியவை.

தற்போது மத்திய ஆசியிலும், ஈரான், இந்திய உபகண்டம் போன்ற தேசங்களிலும் இயங்கும் இஸ்லாமிய அமைப்புகள் முன்வைக்கும் அரசியல் சிந்தனை முழுமையாக மத ரீதியானதே. அத்துடன், மத்திய ஆசியாவில் பரவிவரும் இஸ்லாமிய அலைகள் ரஷ்ய விரோத தேசிய உணர்வுகளுடனும் ஒரு வகையான இணக்கம் கண்டுள்ளது. இது எப்பக்கத்திற்கு சாதகமாக அமைந்தாலும் நஷ்டமடையப் போவது சோவியத் ஒன்றியமே என்பது தெளிவான உண்மை.

ரஷ்ய கலாசாரத்துடன் போட்டியிட்டு மோதி வரும் இஸ்லாமிய கலாசாரத்திற்கு இடமளித்தால் அதனைத் தொடர்ந்து இஸ்லாமிய அடிப்படைவாத ரஷ்யாவில் காலூன்றுவதை தவிர்க்க முடியாததே. அந்த வகையான இஸ்லாமிய உலக இயக்கங்களுடன் உறவு கொள்ள இடமளித்தால் சோவியத் மத்திய ஆசியா மற்றொரு இஸ்லாமியப் போராளிகள் உருவாகும் தளமாக அமையும். என்பதும் ஆராய்ந்து இடமில்லாததே.

இந்த வகையில் சோவியத் ஒன்றியத்தின் தலையாய மற்றொரு டைம் பொம், (Time Bomb) மீது வீற்றிருப்பது மிகத் தெளிவானதே.

நன்றி: திவயின (25.7.90)
சிங்கள நாளிதழ்

## பூஜ்யமாகும் கம்யூனிஸ ராஜ்யம்!

காலாவதியாகி
கல்லறை போகும்
கனவுலகா
கம்யூனிஸம்?
●
ஆசியாக்களை
அடக்கியாள செய்ய
எத்தனை
'மாக்ஸே'
மகாத்மாக்கள்?
●
புரட்சியால் வெடித்து
சரிவினால்
போகுதின்றா
இந்த வரலாறு?
●
'மதம்-
மக்களுக்கு அபின்' என்ற
மார்க்ஸிய வாதத்தை
மாபொன்னதாக்கிய
மாஸ்கோ பூமி
இப்போது-
மதங்களின்
மடியிலே
மண்டியிடுகின்றதாமே?
●

கம்யூனிஸம்

கட்டிக் காத்தவர்களுக்கே
கசப்பாகிப் போன
சிகப்பு வரலாறு!

இருந்தும்-
கம்யூனிஸ்டுகளிற்கு
இன்றைய
''பெரஸ்ட் ரொய்கா''
என்ன 'ஒரு' 'ஸோஸலிஸோட்டமா?''
●
சரித்திரம் படைப்பதாய்
சொல்லிக் கொண்ட
சம்மட்டி, அரிவாள்
செங்கொடி ராஜ்யம்!
ஆப்கானிஸ்தானில்...!
''தரித்திரமே போ'' என
துரத்தியடித்தபோது
காபூலிலிருந்து
நேராக
'கபுருக்கா'போகிறது?
●
ஆப்கானிஸ்தானில்
சம்மட்டி சிதைக்க
அரிவாள் அறுத்த
ஆயிரமாயிரம்

மனிதத் தலைகளால்
அக்டோபர் புரட்சி
தன்னைத் தானே
அலங்கரித்துக் கொண்டது?
●
மாக்ஸியத்தையும்
மின்சாரத்தையும்
பிரகாசித்து உலகு
இனிமேல்—
நிலைக்க முடியாது என
கலைக்க காலடி
தூக்கியவர்களுக்கு

ருமேனியாவில்
லெனினின்
சிலை
தலை பிரளப்
புரட்டப்பட்டபோது...!

புகழ்பாடித்திரிந்தவர்களுக்கு
புரியாமலா இருக்கும்?

பூஜ்யமாகும்
இந்த ராஜ்யத்தை
புரியாமலா இருக்கும்!

— ஏ. அஸீஸ் நிஸாருத்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற இதழின் தொடர்ச்சி)

# நான் எவ்வாறு இஸ்லாத்தைத் தழுவினேன்?

யூசுப் இஸ்லாம் கூறுவதைக் கேளுங்கள்

● தமிழில்: எம். நிஸாம், ஜிப்ரா

திருக்குர்ஆனை படிக்கும் போது நான் ஏற்கனவே இஸ்லாத்தைத் தழுவிவிட்டதாக உணர்ந்தேன். இறைவனால் அனுப்பப்பட்ட ஒவ்வொரு நபியும் ஒரே தூதைத் தான் கொண்டு வந்தார்கள் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். ஏன் யூதர்களும் கிறிஸ்தவர்களும் வித்தியாசமாகக் காணப்படுகிறார்கள்? ஈஸா (அலை) அவர்களை ஏன்? யூதர்கள், நபியாக ஏற்றுக் கொள்ளவில்லை? என்பதையும் அதனால் தான் ஈஸா (அலை) கருத்துக்களை அவர்கள் மாற்றினார்கள் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். ஏன் கிறிஸ்தவர்கள்கூட இறைவனின் கட்டளைகளை தவறாக விளங்கிக் கொண்டதனால்தான் ஈஸா (அலை) அவர்களை இறைவனின் மகன் என்று கூறுகிறார்கள். இவ்வுலகில் படைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு காரணமும் கருத்தும் உண்டு. குர்ஆனின் அழகே தனி அழகு. அது ஒவ்வொரு விடயம் பற்றியும், நியாயத்தையும், ஆதாரத்தையும் கோருகின்றது. சூரியனையும் சந்திரனையும் வணங்காது அவைகளையும் படைத்தவனை வணங்குமாறு கோருகின்றது. இறைவனது படைப்புகளாக (பிரதிநிதிகளாக) பிரதிபலிக்கும்படி குர்ஆன் எம்மிடம் கூறுகின்றது. சூரியன், சந்திரன் ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசங்கள் பற்றி நீங்கள் சிந்தித்ததுண்டா? உலகிலிருந்து அவற்றுக்குள்ள தூரம் வித்தியாசமானது. என்றும் அவை ஒரே அளவினானவை போன்று, எமக்குக் காட்சியளிக்கின்றன. சிலவேளை அவை ஒன்றின்மீது மற்றொன்று சாய்ந்திருப்பது போலும் காட்சியளிக்கின்றன.

இதுவரை விண்வெளிக்கு பல விண்வெளி வீரர்கள் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். அப்போது தெளிவாக பிரமாண்டமான விண்வெளியையும் அதிலுள்ள அழகிய இப்புவி மண்டலத்தையும் கண்டு வியப்படைந்துள்ளனர். விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டு வந்த பின், சமயங்கள் பற்றி சிந்திக்க முயற்சித்துள்ளனர். விண்வெளி வீரர்கள், அவ்வாறு இருப்பதற்கான அத்தாட்சிகளை அவர் தமது கண்ணாலே கண்டு வந்தது அதற்கான முக்கிய காரணமாகும். மேலும் நான் தொடர்ந்து குர்ஆனை வாசித்த போது, அது தொழுகை அன்பு, தர்மம் என்பன பற்றிப் பேசுவதையும் நான் அறிந்து கொண்டேன். அப்போது நான் முஸ்லிமாக இருக்கவில்லை. எனது பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரே தீர்வு குர்ஆனே. இறைவன் எனக்கென்றே அதை (குர்ஆனை) அனுப்பியுள்ளான். நான் அதை இரகசியமாக வைத்துள்ளேன். என்று உணர்ந்தேன். குர்ஆனோ வாழ்க்கையின் பல கட்டங்களைப் பற்றியும் பேசுகின்றது. ஆனால் நான் குர்ஆனை வேறொரு கண்ணோட்டத்தில் விளங்க முற்பட்டேன். "நம்பிக்கையாளர்கள், காபிர்களைத் தங்களது நண்பர்களாக்கிக் கொள்ள மாட்டார்கள் நம்பிக்கையாளர்கள் யாவரும் சகோதரர்களே!" எனும் திருமறை வசனம் எனது சிந்தனையை திசை திருப்பியது. அதன்பின் நான் முஸ்லிம் சகோதரர்களை சந்திக்க ஆவல் கொண்டேன்.

## மதமாற்றம்

எனது சகோதரன் சென்றது போல, நானும் தொழுகைக்குச் செல்ல தீர்மானித்தேன். தொழுகைக்குச் சென்று, மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசலுக்குள் சென்று அமர்ந்து கொண்டேன். ஒரு மனிதர் என்னிடம் வந்து என்ன வேண்டுமெனக் கேட்டார். நான் ஒரு முஸ்லிம் என்று அவரிடம் கூறினேன். அவர் எனது பெயரைக் கேட்டார். 'ஸ்டீவன்ஸ்' என்று சொன்னேன் நான் பெயரைக் கூறியதும் அவர் ஆச்சரியத்துக்குள்ளானார். திரும்பத்திரும்பமாக இஸ்லாமிடமும் நான் தொழுகையிலும் கலந்து கொண்டேன். மீண்டும் நான் லண்டனுக்கு வந்த பின் நபீலா எனும் சகோதரியை சந்தித்தேன். நான் இஸ்லாத்தைத் தழுவ வேண்டுமென அவரிடம் கூறினேன். அவர் எனக்கு நியூ ரீஜண்ட் (New Regent) பள்ளிவாசலுக்கு செல்ல தக்க வழிகாட்டினார். இந் நிகழ்ச்சி 1977ல் நடைபெற்றது. அதாவது நான் குர்ஆனைப் பெற்று வாசித்து, ஒன்றரை வருடங்களின் பின்தான் இஸ்லாத்தைத் தழுவினேன். இதன்பின் என்னிடமுள்ள அகங்காரத்தை அடக்கி 'இப்லீஸின்' கோலத்திலிருந்தும் நீங்கி, இஸ்லாம் காட்டும் ஒரே திசைக்கு நான் திரும்ப வேண்டுமென எண்ணிக் கொண்டேன். ஒரு வெள்ளிக்கிழமை நாளில் ஜும்ஆ தொழுகைக்குப்பின் (பள்ளிவாசல்) இமாமின் கைகளைப் பற்றிக் கொண்டு கலிமாவை மொழிந்து, இஸ்லாத்தைத் தழுவிக் கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேன். முன்னொரு காலத்தில் அதிஷ்டத்தையும் புகழையும் பெற்ற ஒரு மனிதனாக நான் இருந்தேன். ஆனால் வழிகாட்டுதல் என்பது வேறொன்று. ஆம் இஸ்லாம் என்னும் சீரிய வழிகாட்டுதலைப் பெற முடியாத நிலையில் நான் இருந்தேன். ஆனால் குர்ஆனைக் காணும் வரை. அந்த சீரிய வழிகாட்டுதலை பெற்றுக் கொள்ள நான் பெரும் முயற்சியை மேற்கொண்டேன்.

கிறிஸ்தவ சமயத்தையும் ஏனைய சமயங்களையும் போலன்றி இறைவனுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியுமென்று இஸ்லாம் வழிகாட்டுவதை நான் உணர்ந்து கொண்டேன். "ஹிந்துக்களைப் பற்றி உம்மால் புரிந்து கொள்ள முடியாது. நாமும் ஒரு கடவுளைத்தான் நம்புகின்றோம்; வணக்கத்தின் போது எமது உள்ளங்களைக் கட்டுப்படுத்தி ஒருமைப்படுத்திக் கொள்வதற்காகவே நாம் சிலைகளைப் பயன்படுத்துகின்றோம்." என ஒருமுறை ஒரு ஹிந்துப் பெண் என்னிடம் கூறினாள். இறைவனை அடைவதற்கு உதவியாகவே சிலைகள் வணங்கப்படுகின்றன என்பது அப்பெண்ணின் கருத்து. ஆனால் இஸ்லாம் இப்படியான தடைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து விடுகின்றது. தொழுகையே முஸ்லிம்களையும் காபிர்களையும் வேறுபடுத்திக்காட்டும் முக்கிய அம்சமாகும். தூய்மையானதுதான வழிமுறை அதுவேயாகும்.

அல்லாஹ்வை திருப்திப்படுத்துவதற்காகவே நான் அனைத்தையும் செய்கின்றேன் என்பதை நான் இறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது அனுபவங்களினூடாக ஆன்மீக வளர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்காக நான் இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றேன். மேலும் சொல்வதானால், நான் இஸ்லாத்தைத் தழுவுவதற்கு எந்த ஒரு முஸ்லிமும் காரணமாக இருக்கவில்லை. என்பதையும் நான் குறிப்பிட விரும்புகின்றேன். நான் முதலில் குர்ஆனையே வாசித்தேன். அதன்மூலம் இஸ்லாம் மட்டுமே குறைகளற்ற பூரணத்துவமானது. மனிதர்களில் எவரும் அந்த நிலையில் இல்லை. வாழ்க்கையில் முழுமையான வெற்றியை அடைவதற்கு நபி (ஸல்) அவர்களது வாழ்க்கையைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன்.

நபி (ஸல்) அவர்களது உண்மையான உம்மத்துக்களாக வாழ்வதற்கு அல்லாஹ் எம் அனைவருக்கும் அருள்பாலிப்பானாக. ஆமீன்.

---

# உங்கள் கைகளில்

"கண்ணியமிக்க சகோதரிகளே!

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு இஸ்லாமிய முறைப்படி பயிற்சி அளியுங்கள். காலை நேரத்தில் திருக்குர்ஆனின் ஓசையைக் கேட்காத குழந்தைகள் என்னைப் பொறுத்தவரை துர்ப்பாக்கியம் வாய்ந்தவர்களே! அதுபோலவே, தொழுகையைக் காணாத பிள்ளைகளும் துர்ப்பாக்கியசாலிகளே!

உங்களுடைய குடும்ப வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இஸ்லாம் முழுமையாக வெளிப்பட வேண்டும். உங்களுடைய குழந்தைகள் தம் கண்களால் இஸ்லாமிய வாழ்க்கை முறையைக் கண்டு கொண்டே இருக்கவேண்டும். உங்கள் செயல்களிலிருந்து இஸ்லாத்தின் சுவையை அவர்கள் உணர வேண்டும். அதன் நல்ல பாதிப்புகள் அவர்களின் உள்ளங்களில் பதிய வேண்டும். இறைவனின் வார்த்தைகளும் அண்ணலாரின் அருள் மொழிகளும் அவர்களின் காதில் படவேண்டும். அவர்கள் தாமாகவே இஸ்லாத்தைப் பின்பற்றத் தொடங்க வேண்டும். பெரியவர்கள் தொழுவதைக் கண்டு பிள்ளைகளும் தொழத் தொடங்க வேண்டும். ஏகத்துவத்தின் அழைப்பை தாயின் மடியிலேயே கேட்க வேண்டும். இறைவனுக்கு அடிபணிவதன் பொருளை உங்களைக் கொண்டே அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாத்தின் அழகிய முத்திரை அவர்களின் உள்ளங்களில் பதிந்திட வேண்டும். அவர்களின் பழக்க வழக்கங்கள் பண்பாடு ஆகியவை இஸ்லாத்திற்கு ஏற்றவாறு அமைய வேண்டும்.

ஆகவே தம் இல்லத்தை இஸ்லாமிய முறைப்படி அமைத்து தம் குழந்தைகளைச் சரியான முறையில் முஸ்லிமாகத் திகழச் செய்வது ஒவ்வொரு முஸ்லிம் பெண்மணியின் அடிப்படைக் கடமையாகும். இளைய தலைமுறையினரைச் சரியான பாதையில் வார்த்தெடுத்தால் அவர்கள் தம் நாட்டை மிகச் சிறந்த நாடாக மாற்ற முற்படுவார்கள்!

— மௌலானா மியான் துபைல் முஹம்மத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ச்சிக் குத்பாக்கள் உற்பத்தியாகட்டும்!

— ரீ. எஸ். ஷம்ஸ்கான்

வெள்ளியோடு நின்றே
வீணாகக் கழிகிறது!

●

மாதங்களின்...
மாலிகளைக்கு நோன்பு போல
கிழமைகளின்-
கிரீடமல்லவா வெள்ளி!

●

ஜும்மாக்களுக்கின்றே
ஜுரம் பிடித்துள்ளது......
உற்சாகமில்லாத
உரைகளால்தான்!

●

வெள்ளியை இஸ்லாம்
விழாவாக்குவதேன்?
குத்பா அதனுள்
குடியிருப்பதால் தான்!

●

வட்டியும், களவும்...
விபசாரம், விரயம்...
பொய்யோடு, பொறாமை
கதீபின் கல்பிலிருந்து
இத்யாதிகள் தானே-
இறங்கி வருகின்றன...!

●

இஸ்லாத்தின் முகப்பக்கமே
இதைத்தானே சொல்கின்றன!
மீண்டும் அவற்றை-
மீட்டித் தொலைப்பதால்

●

வெள்ளியோடு நின்றே
வீணாகக் கழிகிறது...!

●

புரட்சியை, இறைமையை...
மறுக்கவியலாத 'பத்ரை'
கதீப்களின்றே
கதைக்க மறுப்பதால்
ஜும்மாக்களுக்கின்றே
ஜுரம் பிடித்துள்ளது!

●

எங்கள் திருமறை
எதைச் சொல்லவில்லை!
கருவுக்குள்ளிருந்து-
கல்லறைக்குப் போகும்
பாதைவரைக்கும்
வேண்டியவற்றை
கொட்டித்தருகிறதே!

இப்படியிருக்க-
பழைய பல்லவிகள்
பாடப்படுவதேன்?

●

உணர்ச்சியைக் குத்பா
உற்பத்தி செய்யாததால்தான்-
பள்ளிகளெல்லாம்
"பார்க்"களாக...
காளையர் - கூட்டமாய்
கதைத்துக் கழிப்பதால்
பள்ளிகளின்றே
"பார்க்"களாக...!

●

இந்த இழிவுகளுக்கு
உரிமையாளர்கள் யார்?
கதீப்கள் தான்-
காரண கர்த்தாக்கள்!

●

வெள்ளியோடு நின்றே
வீணாகக் கழிகிறது...
ஜும்மாக்களுக்கின்றே
ஜுரம் பிடிக்காமலிருக்க-
உணர்ச்சிக் குத்பா
உற்பத்தியாகட்டும்!

---

# இஸ்லாமிய த'.வா நிதி

இஸ்லாமிய தஃவாப்பணியினை சிறப்பாகவும் பரந்த அளவிலும் மேற்கொள்வதன் அவசியத்தை உணரும் பலர் இத்துறையில் ஜமாஅத்துடன் ஒத்துழைக்க விரும்புகிறார்கள். சிலர் ஜமாஅத்தின் பணிகளில் நேரில் பங்கு கொள்கின்றனர். வேறு பலருக்கு அவ்வாறான வாய்ப்புக்கிடைப்பதில்லை. இத்தகையவர்களும் இயக்கத்தின் பணியில் பங்கு கொண்ட கூலியைப் பெற்றுக் கொள்ள உதவும் முகமாக இஸ்லாமிய தஃவா நிதியை ஆரம்பித்துள்ளோம். எனவே அல்லாஹ்வின் தீனை நாட்டும் பணியில் பங்கு கொண்டு நிலையான கூலியைப் பெற விரும்பும் நீங்கள் கீழ்காணும் படிவத்தைப் போன்ற ஒன்றைத் தயாரித்து நிரப்பி உங்களின் அன்பளிப்பை ஜமாத்தில் நேரில் ஒப்படைக்குமாறு அல்லது தபால் மூலம் அனுப்புமாறு அன்பாக வேண்டுகிறோம்.

"......அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் எதைச் செலவு செய்தாலும் அதன் கூலி உங்களுக்குப் பூரணமாகவே கிடைக்கும். உங்களுக்கு ஒரு சிறிதும் அநீதி இழைக்கப்படமாட்டாது." (8: 60)

ஜமாஅத்தே இஸ்லாமியின் இஸ்லாமிய தஃவாப் பணிக்கு எனது அன்பளிப்பையும் ஏற்று எனக்கும் அல்லாஹ்விடம் கூலி கிடைக்க உதவுமாறு வேண்டுகிறேன்.

பெயரும் விலாசமும்..................................................

..................................................................

தொகை ரூபா ரொக்கம்/காசோலை/மணியோடர் இல........................

கையொப்பம்:.................................. திகதி ........................

அனுப்ப வேண்டிய முகவரி:
இஸ்லாமிய தஃவா நிதி
Sri Lanka Jama'athe Islami
77, Sri Vajiragnana Mawathe, Colombo-9.

காசோலையில் Sri Lanka Jama'athe Islami என்றும் மணியோடரில் தபாற்கந்தோர் Dematagoda Road, என்றும் குறிப்பிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜமாஅத் இன்றி இஸ்லாமில்லை

## கூட்டு வாழ்க்கையின் முக்கியத்துவம்

ஒவ்வொரு முஸ்லிமும் 'உம்மத்' என்ற இஸ்லாமிய பேரமைப்பில் ஒரு பகுதி. ஆகவே ஒரு முஸ்லிம் இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள் அனைத்தையும் அப்படியே கடைப்பிடித்திட வேண்டும். ஓர் உடலில் ஒரு பகுதியே ஒரு முஸ்லிம். உடல் என்பது அந்த இஸ்லாமிய சமுதாய அமைப்பைக் குறிக்கும். சமுதாய அமைப்பு என்ற உடலிலிருந்து பிரிக்கப்பட்ட நிலையில் அந்த உறுப்பு என்ற தனி முஸ்லிமிற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. இந்த உறுப்பு உடல் முழுவதற்கும் தரப்படும் உணவிலிருந்து ஒரு பகுதியை கிரகித்துக் கொள்கின்றது. தெரிந்தோ தெரியாமலோ இது நடந்து விடுகின்றது.

இறைவனின் வழிகாட்டுதல்கள் அனைத்தும் தனிமனிதன், சமுதாயம் என்ற இரண்டையும் எண்ணத்தில் கொண்டு அருளப்பட்டவையே. நன்மையை ஏவி, தீமையைத் தடுக்கின்ற மகத்தான பொறுப்பை இறைவன் தனிப்பட்ட மனிதனின் மீது மட்டும் சுமத்திடவில்லை. இறைவன் இந்த மாபெரும் பொறுப்பை முழுச் சமுதாயத்தின் மீதும் ஒட்டுமொத்தமாகவே சுமத்தினான். இந்த முழுச் சமுதாயத்தில் தனிமனிதன் ஒரு அங்கம். தனி மனிதன் இந்தப் பொறுப்பை சமுதாயத்தின் ஓர் அங்கம் என்ற அடிப்படையிலேயே நிறைவேற்றுகின்றான். திருக்குர்ஆனில் அருளப்பட்டிருக்கும் அத்தனை கட்டளைகளும் இந்த அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன.

''விசுவாசிகளே! நீங்கள் குனிந்து சிரம் பணிந்து உங்கள் இறைவனை வணங்குங்கள். நன்மையே செய்து கொண்டிருங்கள், அதனால் நீங்கள் வெற்றியடையலாம்
(22:77)

விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுடைய பாதையில் முயற்சி செய்யவேண்டியவாறு முயற்சி செய்யுங்கள்.
(22: 78)

### தொழுகையின்போது

ஒரு முஸ்லிம் தொழுகையில் தன் இறைவன்முன் நின்றிடும்போது, மிகவும் தாழ்மையுடன் நிற்கின்றான், முறையிடுகின்றான். இத்தனையும் அவன் தனித்தோ தனக்காக மட்டுமோ செய்வதில்லை; அவன் தன்னோடு ஈமான்கொண்ட சகோதரர்களை மறந்த நிலையில் வாழ்வதில்லை. வணங்குவதில்லை; அவன் நாள்தோறும் சமுதாய அமைப்போடும் சேர்ந்தே வாழ்கின்றான். இறைவனை வணங்குகின்றான், இறைவனிடம் மன்றாடுகின்றான், முறையிடுகின்றான்.

''உன்னையே நாங்கள் வணங்குகின்றோம்; உன்னிடமே உதவியும் தேடுகின்றோம். (1:4)

இங்கே '; 'நாங்கள்' என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளதே தவிர ''நான் '' என்ற சொல் பிரயோகிக்கப்படவில்லை. இது கூர்ந்து கவனிக்கத்தக்கது. ஆழ்ந்து சிந்திக்கவேண்டியது.

தொடர்ந்து இறைவனின் அடிமை தன் எஜமானனிடம் நேர்வழி தரவேண்டி, இறைஞ்சுகின்றான்;

நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக! எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்களுடைய வழியில் (நடத்துவாயாக)

இங்கேயும் 'என்னை' என்ற ஒருமையைப் பயன்படுத்தப்படவில்லை. 'எங்களை ' என்ற பன்மையே பயன்படுத்தப்பட்டுள்ளது.

### அஞ்ஞெயக் முறைமைத் அக்கவ்ளாளி

இறைவன் மனிதர்களைப் படைத்தது, அவர்கள் தங்களுக்குள் பிரிந்து நின்று போராடி இடர்ப்பிணக்குகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதற்காக அல்ல. அவன் மனிதர்கள் அனைவரையும் ஏற்றத்தாழ்வின்றி படைத்தான். அனைவருக்கும் ஒரே வழிகாட்டுதலையே வழங்கினான். அவன் மனிதர்களுக்கு நேர்வழி காட்டிட அனுப்பிய இறைத்தூதர்கள் அனைவரும் மக்களை ஒரே மார்க்கத்தை நோக்கியே அழைத்தார்கள் அத்துடன் இறைவனை நோக்கியே அழைத்தார்கள். அந்த முதல் நாள் முதலே மனிதர்கள் மார்க்கத்தில் குழப்பத்தை விளைவிப்பதையும் பிளந்து நின்று வாழ்வதையும் இறைவன் தடைசெய்துள்ளான்.

ஷைத்தான் விரித்த வலையில் வீழ்ந்து விடுகின்ற மனிதன் இறைவனின் இந்த வழிகாட்டுதலை மறக்க ஆரம்பித்தான். மனிதர்கள் அனைவரும் ஒரே இனம் என இறைவன் சொன்ன உறவு முறையைப் புறக்கணித்தான். மனிதர்கள் தங்களுக்குள் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து நின்றனர். தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். இதைத்தான் இறைவன் தன்னுடைய திருமறையில் தெள்ளத்தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றான்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரையும் நோக்கி) என்னுடைய தூதர்களே! நீங்கள் பரிசுத்தமானவற்றையே புசியுங்கள். நற்காரியங்களையே செய்யுங்கள். நிச்சயமாக நான் நீங்கள் செய்பவற்றை நன்கறிபவனாக இருக்கின்றேன். நிச்சயமாக உங்களுடைய இந்தச் சமுதாயம் சமுதாயம் ஒன்றுதான். (இதில் எத்தகைய வேற்றுமையும் கிடையாது) நானே உங்களுடைய இறைவன். ஆகவே, நீங்கள் எனக்கே பயப்படுங்கள் (என்று கட்டளையிட்டிருந்தோம்) அவர்களும் தம் மக்களுக்கு அவ்வாறே எடுத்துக்கூறி வந்தனர்.

எனினும் (மனிதர்கள்) தங்களுடைய மார்க்கக் காரியங்களில் பல பிரிவுகளாகப் பிரிந்துகொண்டு ஒவ்வொரு வகுப்பாரும் தங்களிடமுள்ள பிரிவைக் கொண்டு சந்தோஷமடைகின்றனர்.

(நபியே!) நீர் ஒரு காலம் வரையில் அவர்களை அவர்களுடைய குழப்பத்தில் விட்டுவிடுவீராக.
(23: 51—54)

## அறிவின் ஆரம்பம்

மனிதன் தன்னுடைய ஆசைகளைப் பின்பற்றும்போதும், குழப்பம் விளைவிப்பதில் சந்தோஷமடையும் போதும்தான் மனிதர்கள் பிரிந்து நின்று அழிய ஆரம்பித்து விடுகின்றனர். இதையே இறைவன் இங்கே மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டி இருக்கின்றான்.

மனிதன் பெறும் அறிவுக்கும் அவனுடைய ஒழுக்க மாண்புகளுக்கும் இடையே எந்தத் தொடர்புமில்லை என்றாகும்போது அறிவு அபாயம் நிறைந்ததொரு ஆயுதமாக ஆகிவிடுகின்றது. இத்தகைய அறிவு அதனைப் பெறுபவர்களுக்கு மட்டுமின்றி அடுத்தவர்களுக்கும் ஒரு பெரும் பிரச்சினையாகவே ஆகிவிடுகின்றது. இஸ்லாத்திற்கு முந்தைய காலக்கட்டங்களில் மனிதன் அறியாமை என்ற ஆழ் குழியில் வீழ்ந்து கிடந்தான். இஸ்லாம் வந்த பிறகு நயவஞ்சகர்களும், உள்ளொன்று இருக்க புறத்தே நம்பிக்கை கொண்டவர்களைப் போல் காட்டிக்கொண்ட அற்பப் புத்தியினரும் இறை வசனங்களைத் தவறாகத் திரித்துக்கூறி இலாபம் தேட முயன்றபோதுதான் மக்கள் பிரிந்து குழப்பத்தின் எல்லைக்கே போய்விட்டனர்.

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

"உங்களைப் பொறுத்த வரை, மனம் வேறு சொல் வேறுடைய நா நயமிக்க நயவஞ்சகனால் விளைவிக்கும் குழப்பத்தைக்கொண்டே (அதில் நீங்கள் வீழ்ந்து விடுவீர்களோ) நான் அதிகமாக அஞ்சுகின்றேன்"
(பஸ்ஸார்)

## குழப்பவாதிகள்

நல்ல ஒழுக்க மாண்புகளுக்கேற்ப தங்களை ஆட்படுத்திக்கொள்ளாத அறிவாளர்கள் குழப்பத்தின் ஊற்றுக் கண்களாக மாறிவிடுகின்றனர். அன்று முதல் இன்று வரை இத்தகைய அறிவாளர்களால் மனித இனம் எத்தனையோ இழப்புகளுக்கு உள்ளாகியுள்ளது. தங்களுடைய அறிவை நா நயத்தோடு மட்டுமே நிறுத்திக்கொள்பவர்கள் உள்ளத்தில் ஒழுக்க வரைமுறைகள் எதுவுமே இல்லாதவர்கள். இவர்களால் தான் மனித இனம் அழிந்துபோய் விடுகின்றது என்ற உண்மையை இறைவன் தெளிவாகவே தொட்டுக் காட்டியுள்ளான்.

(விசுவாசிகளே!) "நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான். ஆகவே (நபியே!) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும் இப்ராஹீம் மூஸா, ஈஸா ஆகியோருக்கு நாம் உபதேசித்ததும் என்னவென்றால் மார்க்கத்தை நிலைநாட்டிக் கொள்ளுங்கள், அதில் (பல பிரிவுகளாகப்) பிரிவினை செய்து கொள்ளாதீர்கள்" என்பதேயாகும். (ஆகவே அவர்களை நீர் அழைக்கும் (ஏக தெய்வக்கொள்கையாகிய) இது இணைவைத்து வணங்குபவர்களுக்குப் பெரும் பளுவாகத் தோன்றும். அல்லாஹ்தான் விரும்பியவர்களையே தன் வழியில் தெரிந்தெடுத்துக் கொள்கின்றான். அவனை நோக்கியவர்களுக்கே தன்னிடம் வரும் வழியையும் அவன் அறிவிக்கின்றான்
(42: 13)

இதன் பிறகு இறைவன் கூறுகின்றான்:

அவர்கள் தங்களிடம் ஞானம் வந்த பின்னர் தங்களுக்கிடையேயுள்ள பொறாமையின் காரணமாகவேயன்றி அவர்கள் பிரிந்து விடவில்லை.
(42: 14)

பிறிதொரு இடத்தில் இறைவன் கூறுகின்றான்.

(ஆரம்பத்தில்) மனிதர்கள் (அனைவரும்) ஒரே சமுதாயத்தினராகவே இருந்தனர். அவர்கள் நேரான வழியில் செல்லும் பொருட்டு, நன்மை செய்வோருக்கு) நன்மாராயம் கூறும்படியும், (தீமை செய்வோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும்படியும் அல்லாஹ் நபிமார்களை அனுப்பிவைத்தான். தவிர அம்மக்களுக்குள் ஏற்படும் விவகாரங்களைத் தீர்த்து வைக்கும் பொருட்டு, அவர்களோடு சத்தியவேதத்தையும் அருள் செய்தான்: இவ்வாறு தெளிவான அத்தாட்சிகள் (உள்ள வேதம்) வந்ததன் பின்னர் அதனைப் பெற்றுக்கொண்ட அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட பொறாமையின் காரணமாகவே மாறுசெய்ய முற்பட்டனர்.
(2: 213)

அறிவு மக்களுக்குப் பயன்படவேண்டும் என்ற அக்கறை இல்லாமலாகிவிடும்போது அது மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக அன்புகொண்டு பணிபுரிவதற்குப் பதிலாக ஆக்ரோஷம், சக்தியாகப் பிரயோகிக்கப்பட்டு விடுகின்றது. அறிவுகளை ஏற்படுத்திவிடுகின்றது. இந்த அறிவு மனிதர்களிடையே நிலவிட வேண்டிய நல்ல உறவுகளை உடைத்தெறிந்து சமுதாயத்தைக் கூறுபோட்டதாக மாறிவிடுகின்றது. இத்தனையும் அறிவு அல்லாஹ்வின் கட்டளையைப் புறக்கணித்திடும்போது தலைதூக்கி நடக்கும்.

**கருத்துவேறுபாடுகளைக் காரணம் காட்டி உம்மத்தைக் கூறுபோடுவது பாவமாகும்.**

கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுவிடுவது என்பது உலக வாழ்க்கையில் ஒன்றும் புதுமையான செயலல்ல. இதில் தவறுமில்லை. ஆனால் கருத்து வேறுபாடுகள் மனிதர்களுக்கிடையே வெறுப்பையும் பகைமையையும் வளர்த்திடக் கூடாது.

கருத்து வேறுபாடுகள் எப்போது குழப்பங்களுக்கும் பகையாக மாறும் என்றால் கருத்து வேறுபாடுகளோடு வேறு உலக ஆசைகளும் விரவி நிற்கும்போதுதான். தானே தனக்கே அனைத்தும் தெரியும் என்ற தற்பெருமை எண்ணம், இவை தலை தூக்கிடும்போதுதான் கருத்து வேறுபாடுகள் மனிதர்களைப் பிளக்கும் கோடரியாக மாறிவிடுகின்றன.

கருத்துக்களைப் பரிமாறிடும்போது எண்ணங்கள் தூய்மையானவையாகவும், மனம் அடுத்தவர்களை வென்றி கொள்ள வேண்டும், நமக்கே தெரியும் என்பதை நிலைநாட்டிட வேண்டும் என்ற அழுக்காறுகளுக்கு அப்பாற்பட்டதாகவும் இருந்திடுமேயானால் கருத்து வேறுபாடுகள் நன்மை பயக்கும், ஒருபோதும் தீமை பயக்காது. கடந்த காலங்களில் எவ்வளவு சோக சம்பவங்கள் நிகழ்ந்திருக்கமாட்டா. ஆனால், நாம் வேறு ஒரு விதமான வரலாற்றையே சந்திக்கின்றோம். கருத்து வேறுபாடுகளோடு சுயநலமிக்க உள்நோக்கங்கள் கலந்துவிட்டதால்தான் மனித இனத்தின் வரலாறு இரத்தக்கறைப் படிந்ததாக ஆக்கப்பட்டுவிட்டது. சாதாரண வேறுபாடுகள் பூதாகரமாக ஆக்கப்பட்டு — புனையப்பட்டு — போர்களாக மூண்டிருக்கின்றன. கருத்துக்களைப் பரிமாறிடும்போது எண்ணங்கள் தூய்மையாக இருந்திட்ட போதெல்லாம் மிகப் பெரிய பிரச்சினைகள் கூட சிறியவையாக ஆக்கப்பட்டு மறக்கப்பட்டு விட்டன.

> எவர்கள் தங்கள் மார்க்கத்தைப் பிரித்து பல பிரிவினராகப் பிரிந்து விட்டனரோ அவர்களுடன் உமக்கு யாதொரு சம்பந்தமுமில்லை. அவர்களுடைய விஷயமெல்லாம் அல்லாஹ்விடமே இருக்கின்றது. அவர்கள் செய்து கொண்டிருந்தவைப் பற்றி பின்னர் அவன் அவர்களுக்கு அறிவித்து விடுவான். (6: 159)

கடந்த காலங்களில் மக்கள் மார்க்கத்தில் பிரிவுகளைத் தோற்றுவித்துப் பிரிந்து நின்றதைப்போன்று தவறுகளை முஸ்லிம்கள் செய்து விடக்கூடாது என இறைவன் முஸ்லிம்களை எச்சரிக்கின்றான். அவர்கள் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளக் கூடாது என்றும் இறைவன் தெளிவுபடுத்தியிருக்கின்றான்.

> (விசுவாசிகளே!) அவர்கள் தங்களிடம் தெளிவான சான்றுகள் வந்ததன் பின்னரும் தங்களுக்குள் (கருத்து) வேறுபட்டுப் பிரிந்து போனவர்களைப் போல நீங்களும் ஆகிவிட வேண்டாம். இத்தகையோருக்குத் தான் (மறுமையில்) மகத்தான வேதனையுண்டு.

## கோழைத்தனத்திற்கு காரணமென்ன?

ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நமது தோழர்களுக்கு உபதேசம் செய்யும்போது திருத்தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டதாவது: ''ஒரு காலம் வரும். அப்போது, பசியுள்ளவர்கள் உணவின் பொருட்டுக் கொள்வது போல, ஏனைய உம்மத்தவர் எமது உம்மத்தவர்களைச் சூழ்ந்து கொள்வர்'' என்றார்கள். அப்போது ஒருவர் ''இறைத்தூதர் (ஸல்) அவர்களே! ஏனைய மக்கள் எம்மைப் பூண்டோடு அழிப்பதற்காக அணி திரளும் அளவு எமது எண்ணிக்கை குறைந்து விடுமா?'' எனக் கேட்டார். இதற்கு நபிகளார் (ஸல்) அவர்கள் ''உங்கள் எண்ணிக்கை சிறிதாக இருக்கமாட்டாது. உண்மையிலே நீங்கள் தொகையில் மிகவும் கூடியவர்களாகவே இருப்பீர்கள். வெள்ளப்பெருக்கில் மிதக்கும் வைக்கோல்கள் எண்ணிக்கையில் அதிகமாகவிருப்பதும் அவற்றுக்குப் போதியளவு நிறை இல்லாதிருப்பதும் போல் உங்கள் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் இருக்காது. உங்கள் எதிரிகள் உங்களைக் கண்டு அச்சம் கொள்ளமாட்டார்கள். கோழைத்தனம் உங்கள் இதயங்களில் குடிகொள்ளும்'' எனக் கூறினார்கள். இக்கூட்டத்தில் ஒருவர் குறுக்கிட்டு ''இறைத்தூதர் (ஸல்) அவர்களே, இக்கோழைத்தனத்துக்குக் காரணமென்ன?'' எனக் கேட்டார். ''அதற்கான காரணம் நீங்கள் உலக வாழ்க்கையை அதிகம் நேசிப்பதும் மரணத்தை வெறுப்பதுமாகும்'' என்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநபி பற்றி மாறுபட்ட இரு நோக்குகள்

இன்று றசூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றி மேடைகளில் தோன்றிப் பலர் சொற்பொழிவாற்றுகின்றனர்; வானொலியில் உரை நிகழ்த்துகின்றனர்; செய்தி இதழ்களிலும் சஞ்சிகைகளிலும் கட்டுரைகள் வரைகின்றனர். இவர்களிற் பெரும்பாலானவர்களின் கருத்துக்களை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஆராய்ந்தால் இன்று முஸ்லிம்கள் எவ்வளவு பெரிய சிந்தனைக் குழப்பத்தில் சிக்கித் தடுமாறுகிறார்கள்; இஸ்லாமிய நெறியிலிருந்து எத்தனை தூரம் விலகிச் சென்றிருக்கிறார்கள் என்பதை எளிதில் உணரலாம்.

## காற்றடித்த பக்கம்

நாட்டில் மதிக்கப்படும் கொள்கைகள் பல இருக்கின்றன. இவற்றில் ஒவ்வொன்றும் முஸ்லிம்களின் ஒரு சாராரின் ஆதரவைப் பெற்றிருக்கின்றது. உண்மையில் முஸ்லிம்களின் அன்பைப் பெறாத கொள்கை ஒன்றுமே இன்று இல்லை எனலாம். இதனால் முஸ்லிம் பேச்சாளர்கள் பலர் பேசும் ஒரு கூட்டத்துக்குச் சென்றால் அங்கு நபி (ஸல்) அவர்களின் சாதனைகளை வர்ணித்துக்கொண்டே வரும் அவர்கள், இக்காலப் பிரச்சினைகளைப்பற்றி விமர்சனம் செய்ய ஆரம்பித்ததும் அவைகளுக்குப் பரிகாரமாக பல்வேறு கட்சிகளது கொள்கைகளுள் எது சரியானது என்று தத்தம் உள்ளங்களில் பதிந்திருக்கிறதோ அதையே நபி (ஸல்) அவர்களது கொள்கையென்றும், அதற்காக வேலை செய்வது நபிகளாரின் எண்ணத்துக்கு உகந்தது என்றும் கூற ஆரம்பிக்கின்றனர்.

இஸ்லாத்துக்கு ஆதாரபூர்வமான விளக்கமாக அமைந்துள்ள அல்லாஹ்வின் வேதத்தையும், திருத்தூதரின் எண்ணத்தையும் அணுகி, ஆராய்ந்து அவை காட்டும் முறையுன்ன அளவுகோல்களாகக் கொண்டு, நாட்டில் நடமாடும் கொள்கைகளைப் பற்றி முடிவு செய்யும் வழக்கம் முஸ்லிம்களை விட்டு மறைந்து பல நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. இன்று நாட்டில் நடமாடும் கொள்கைகளை ஒப்புக்கொண்டதன் பின்னர் தம் உணர்ச்சியைத் திருப்திப்படுத்துவதற்காக இக்கொள்கைகளைத்தான் எங்கள் நபியும் போதித்தார்கள் என்று எடுத்துப்போகும் வழக்கம் ஏற்பட்டு விட்டது. இதனால் முஸ்லிம்கள் தம்மை அறியாமலே ஷைத்தானின் வலையில் வீழ்ந்து அல்லாஹ்வின் தூதர் காட்டிய முறைகளுக்கு முரணானதும், மனித சமுதாயத்துக்கு அழிவை அளிப்பதுமான கொள்கைகளைப் பின்பற்றி வழி தவறும் நிலை தோன்றியிருக்கிறது.

இன்று மக்களை ஈர்த்துள்ள அரசியல், பொருளியல், சமூகவியல் கொள்கைகளின் முக்கிய ஆதரவாளர்கள் ஒவ்வொருவரும் தத்தம் கொள்கைகளுக்குச் சாதகமாக இறைதூதர் (ஸல்) அவர்களை பயன்படுத்த முயற்சிக்கின்றனர். அவர்கள் ஒரு ஜனநாயகவாதியே என்று ஒரு முஸ்லிம் கூறுகையில், அவர்கள் சோஷலிஸவாதி என்று இன்னொருவர் கூறுகிறார்; மூன்றாம் ஒருவர் அண்ணலை ஒரு கம்யூனிஸ்ட் என்றே அச்சமின்றி அழைக்கிறார். ஆனால் அண்ணல் நபியின் கொள்கைகளுக்கும் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கும் இடையில் அடிப்படை வித்தியாசங்கள் பல இருக்கின்றன என்பதை இவர்கள் உணர்வதில்லை.

## இஸ்லாமிய நோக்கு

மக்களைப் படைத்துப் பாதுகாக்கும் அல்லாஹ் ஒருவனை மட்டுமே அவர்களுடைய ஆன்மிக, அரசியல், பொருளாதார, சமுதாய, கல்வி, கலாசார சம்பந்தமான பிரச்சினைகளுக்குப் பரிகாரமாக உள்ள சட்டங்களை இயற்றும் உரிமை பெற்றவன் என்பதை அங்கீகரிக்க வேண்டும் என்று இஸ்லாம் அறிவுறுத்துகிறது. தனது தூதர் மூலமாக அவ்வுரிமையை அவன் உபயோகித்ததன்படியால் அத்தூதரை நூற்றுக்கு நூறு விதம் தவறிழைக்காத வழிகாட்டியாக, தலைவராக ஒப்புக்கொண்டு அவருடைய வழிக்கு மாற்றமாக மக்களை வழிநடத்தும் சகல தலைவர்களையும் நிராகரிக்கும்படியும் அது அழைக்கிறது.

இத்தலைவர் காட்டிய வழி ஒரு குறிப்பிட்ட துறையுடன் மட்டுமே நிற்கவில்லை. நபி (ஸல்) அவர்கள் ஆன்மிகப் பிரச்சினைகளுக்கு மாத்திரம் பரிகாரம் வழங்கிவிட்டு ஏனைய அரசியல், சமூகப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண முதலாளித்துவத்தையோ சோஷலிஸத்தையோ பின்பற்றும்படி விட்டு வைக்கவில்லை. இஸ்லாம் வாழ்க்கையின் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க விழைகிறது. இக்கொள்கையை ஒப்புக்கொள்ளும் மக்கள் ஒரு தனிச்சமுதாயமாக அமைந்து அல்லாஹ்வின் சட்டத்தின்படி வாழும்படி கூறுகிறது; பிறரையும் வாழத் தூண்டுகிறது. அதுமட்டுமல்ல; அச்சட்டத்தின்படி நாட்டு நிர்வாகத்தை மேற்கொள்ளும் ஓர் சமூகத்தை அமைக்க முயற்சிக்கும்படியும் அழைக்கிறது. இவ்வழைப்பின்படி செயலாற்ற முன்வரும் சகலரும் அல்லாஹ்வைப் பற்றிய அச்சமும், இவ்வுலகில் தாம் நடத்திய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சம் பற்றியும் கூட மறுமையில் பதில் கூற வேண்டிய பொறுப்பு இருக்கிறதே என்ற கவலையுடனும் ஒவ்வொரு நிமிடமும் வாழ வேண்டும். இத்தகைய வாழ்க்கையை ஆன்மிகம் என்ற எல்லைக்குள் சுருக்கிவிடாது, அரசியலிலும் பொருளாதாரத்திலும் கல்வி, கலாசார, சமுதாய நடவடிக்கைகளிலும் கடைப்பிடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்: இப்படியாக, இம்மைம் உலகில் ஓர் உன்னத சமுதாயத்தைத் தோற்றுவிக்க விரும்புகிறது; இதுதான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உண்மையான போதனை.

இன்றைய இஸ்லாமிய வாதிகளும், முதலாளித்துவ வாதிகளும், சோஷலிச கம்யூனிச வாதிகளும் அல்லாஹ்வின் அதிகாரத்தை அங்கீகரித்து அவனுடைய றஸூலின் தூதை ஏற்றுக்கொண்டு, மறுமை வாழ்க்கையையும் நம்பி, அவைகளின் படிதானா செயலாற்றுகின்றனர்? இக்கேள்விக்கு 'ஆம்' என்று பதில் அளிக்க முடிந்தால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை ஒரு ஜனநாயகவாதி என்றோ சோஷலிஸ, கம்யூனிஸவாதி என்றோ நாம் தாராளமாகக்கூறி, வேண்டிய மட்டும் பெருமைப்படலாம். ஆனால் ரசூல் (ஸல்) அவர்கள் ஜனநாயகத்தையோ, கம்யூனிஸத்தையோ, வேறு எந்தக்கொள்கையையுமோ போதிக்கவில்லை. அவர் போதித்தது இஸ்லாம் என்ற தனிக்கொள்கையையாகும். எனவே இஸ்லாத்தைத் தவிர வேறு எந்தக் கொள்கையையும் முஸ்லிம்கள் ஏற்க முடியாது.

---


## பிரபோதய

சிங்கள மொழியில் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக வெளிவரும் ஒரே மாசிகை. சிங்கள மொழியில் கல்வி பயிலும் உங்கள் பிள்ளைகளுக்கும் பக்கத்து வீட்டு பாடசாலை மாணவர்களுக்கும் கட்டாயமாகப் படிக்க வேண்டியது. உங்கள் நண்பர்களுக்கு அன்பளிப்புச் செய்ய மிகவும் பொருத்தமானது.

தனிப்பிரதி ரூபா: 5.00
வருட சந்தா ரூபா: 72.00

காசோலை மணியோடர்களில் Islamic Publication Centre என எழுதுங்கள் தபாற்கந்தோர் Dematagoda Road, என்றும் எழுதுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**PRABODAYA**
Sri Lanka Jama'athe Islami
77, Sri Vajiraghana Mawathe, Colombo-9.
T'P 686030, 692789

---

*With Best Compliments*

*from*

**SPECIALISTS IN TAILORING:**

# RASHEED'S

DEALERS IN: QUALITY HOUSE HOLD ELECTRICAL APPLIANCES AND TEXTILE ETC ...

85, CASTLE HILL STREET,
KANDY.

**Tel: 08-24445**

RASHEED'S
SRI LANKA.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய நேசர்களுக்கு

# ஒற்றுமைக்கு இப்படியும் வழியுண்டு

சமூகத்தின் தேவைகளும் நலன்களும் பலதரப் பட்டவை எனவே என்னதான் முயன்றாலும், அனைத்து திறமைகளையும் ஒன்றாகத் திரட்டி உழைத்தாலும் கடந்த காலங்களில் அறிஞர்களின் கவனயீனம் முஸ்லிம்களின் அறியாமை, ஆட்சியாளர், அதிகாரிகளின் பொடுபோக்கு எல்லாவற்றின் காரணமாக சமூகத்தில் தோன்றியுள்ள பிரச்சினைகள் அனைத்துக்கும் உடனடியாகத் தீர்வு காண்பது அசாத்தியமானது.

இன்று எமக்கு மிகவும் முக்கியமான பல பிரச்சினைகளுண்டு. அவை தீர்க்கப்பட வேண்டுமானால் நாம் எல்லோரும் ஓரே அணியாகத் திரள வேண்டும். எமக்கிடையில் உள்ள பிணக்குகளை மறந்து ஐக்கியப் பட்டாக வேண்டும். நாம் ஒவ்வொருவரும் மிக்க நிதானமாகச் சிந்தித்து எம்மால் வழங்க முடிந்த பங்களிப்புக்களை இனங்கண்டு உரிய முறையில் அவற்றை வழங்குவது அவசியமாகும். சமூகத்தின் உள்ள ஒவ்வொரு பிரிவினரும் சமூகத்தில் உள்ள பிரச்சினைகளில் தம்மால் முடிந்த சில பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முற்பட வேண்டும், இதுவே சாத்தியமான காரியம்.

## தவிர்க்க முடியாதது

ஆனால் முஸ்லிம்கள் எல்லோரும் ஐக்கியப்பட்டால் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து விடலாம் என்று நம்மில் பலர் எதிர்பார்க்கிறோம். அப்படியான ஒரு நிலை ஏற்படுமாயின் அது மிகவும் நல்லது ஆயினும் நீண்ட காலமாகப் பிரிந்து செயல்பட்ட நம்மை திடீரென்று ஒரே தலைமையின் கீழ் அணி திரட்டுவதென்பது அசாத்தியமானது. இதற்கு நீண்ட காலம் எடுக்கும். எனவே முஸ்லிம்கள் மத்தியில் சிற்சில கருத்து வேறுபாடுகளும் தனித்தனியான செயற்பாடுகளும் காணப்படுவது தற்போதைய நிலையில் தவிர்க்க முடியாதது. என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அதே வேளை இந்தக் கருத்து வேற்றுமைகளையும் பிரிந்து செயல்படுவதையும் பெரிதுபட நோக்கி அதன் மூலம் நம்மை மேலும் பிளவுபடுத்தும் காரணிகளாக அவற்றை ஆக்கிக் கொள்ளக் கூடாது; இத்தகைய வேற்றுமைக்கு மத்தியிலும் ஒற்றுமை காண முயற்சிக்க வேண்டும். எனவே நமது கருத்து வேற்றுமைகளையும் வித்தியாசமான செயற்பாடுகளையும் எதிரும் புதிருமானவை என்றோ சண்டை சச்சரவுக்கு இட்டுச் செல்பவை என்றோ நாம் கருதி விடக் கூடாது. புரிந்துணர்வுடன் ஒவ்வொரு பிரிவினரும் சமூகத்தின் நலனும் வளமும் காக்கப் பல் வேறு கோணங்களிலிருந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்வாறு நாம் நடப்பது தனிப் பட்ட முறையிலும் சமூக மட்டத்திலும் நன்மை பயப்பதுமட்டுமல்ல, ஷரீஅத்தின் கண்ணோட்டத் தில் இது நாம் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாய வழி முறையுமாகும்.

## இப்படிச் செயல் படலாம்

நம்மில் ஒரு சாரார் மக்களின் அகீதாவில் குறி யாக, மௌலவிமார்களின் போதனைகளுக்கு மாற்றமான வகைகளைக் களைந்து சரியான நம்பிக்கைகளை அவர்களிடம் புகுத்தி ஸ்திரப்படுத்தும் முயற்சியில் ஈடுபடலாம். மற்றொரு பிரிவினர் மக்களின் இபாதத்களில் காணப்படும் தவறுகளை உணர்த்தி அவர்களுக்கு மார்க்க அறிவைப் புகட்டி ஷரீஅத் கூறும் வழியில் அவர்களின் வணக்க வழிபாடுகள் அமைய உதவ முயலலாம். பிறிதொரு குழுவினர் இஸ்லாம் தரும் சமூக ஒழுக்கத் திட்டங்கள் பொருளாதார அமைப்புக்கள் போன்ற ஏதாவது ஒரு துறையை நடைமுறைப் படுத்தி மக்களின் பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய வழியில் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கலாம். வேறு சிலர் மற்ற மனிதர்களுக்கு இஸ்லாமிய அழைப்பை முன்வைக்கும் முயற்சிகளில் ஈடுபடலாம். சில இயக் கங்கள் ஆண், பெண்களிடம் இஸ்லாத்துக்கு முரணான பழக்க வழக்கங்களையும் ஆடம்பரச் செலவு களையும் அநாகரிகங்களையும் இல்லாமலாக்கி குடும்ப வாழ்க்கையை இஸ்லாமிய முறையில் மாற்றியமைக்கும் முயற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உழைக்கலாம்; ஒரு கட்சிக்குச் சேர்ந்தவர்கள் அரசியலில் குதித்து மத விரோத சிந்தனைகளையும் இஸ்லாத்துக்கு முரணான சட்ட திட்டங்களையும் எதிர்த்து நின்று முஸ்லிம்களையும் மதரஸாக்களையும் பாதுகாக்கலாம்; இன்னும் சிலர் சிறுவர்களின் கல்விப் பயிற்சியிலும் அவர்களிடம் சீரிய சிந்தனையை ஏற்படுத்தி உயர்ந்த ஒழுக்கங்களைப் பயிற்றுவிப்பதில் கவனம் செலுத்த முடியும். வேறு சிலர் தங்களது சக்திக்கும் வசதிக் கும் ஏற்ப ஏக காலத்தில் எல்லாத்துறைகளிலும் அல்லது பயனுள்ள முக்கிய சில துறைகளில் அக்கறை கொண்டு முறையாகப் பணியாற்றவும் முடியும்.

## சாத்தியமான வழி

முஸ்லிம்கள் பல இயக்கங்களாகவும், பிரிவுகளாக வும் குழுக்களாகவும் கட்சிகளாகவும் பிரிந்துள்ள இன்றைய நிலையில் சாத்தியமானதும் ஆக்கபூர்வ மானதும் உடனடியாக மேற்கொள்ள முடிந்தது மான நடைமுறை இதுவே என்பதில் இரண்டு

(தொடர்ச்சி 32-ம் பக்கத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமிய அரசியல் - 5

# கிலாபத் என்றால் என்ன?

பூவுலகில் மனிதனுக்குக் கிடைக்கும் வளங்கள் ஆற்றல்கள் என்று அனைத்தும் அல்லாஹ்வின் புறமிருந்து கிடைக்கும் அருள்களாகும்; இறைவனிடமிருந்து கிடைக்கப் பெறும் இந்தக் கொடைகள் அனைத்தையும் அந்த இறைவன் விரும்பும் வண்ணம் பயன்படுத்தும் உரிமையுள்ளவனாக மனிதனை அவன் படைத்திருக்கிறான். இந்த வகையில் மனிதன் இந்த அருட் கொடைகளின் உரிமையாளனாக இல்லை, உண்மையில் அவன் அவை அனைத்துக்கும் உரித்தானவனான அல்லாஹ்வின் பிரதிநிதியாகவே இருக்கிறான் என்பதே கிலாபத் பற்றிய குர்ஆனின் கண்ணோட்டமாகும்.

நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியைப் படைக்கப் போகின்றேன் என்று உங்களது ரப்பு மலக்குகளிடம் கூறியபோது (2: 30)

(மனிதர்களே) நிச்சயமாக நாம் உங்களுக்கு பூமியில் அதிகாரத்தைக் கொடுத்து அதில் உங்களுக்கு வாழ்க்கை வசதிகளையும் அமைத்துத் தந்தோம் (7: 10)

பூமியில் உள்ள அனைத்தையும் அல்லாஹ் நிச்சயமாக உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருக்கிறான் என்பதை நபியே நீங்கள் பார்க்கவில்லையா... (22: 65)

என்ற திருவசனங்களில் இந்தக் கருத்தே வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

எனவே உலகின் எந்தவொரு பகுதியிலேனும் ஆட்சி அதிகாரத்தைப் பெறும் எந்தச் சமூகமும் உண்மையில் அங்கு அல்லாஹ்வின் பிரதிநிதியாகவே ஆகிறது.

''நூஹ் (அலை) அவர்களின் சமூகத்தவருக்குப் பிறகு அவன் உங்களைப் பிரதிநிதிகளாக ஆக்கியதை நீங்கள் நினைத்துப்பாருங்கள்...'' (7: 69)

ஆத் வர்க்கத்தவரின் பின் அவன் உங்களைப் பிரதிநிதிகளாக ஆக்கியதை நினைத்துப்பாருங்கள்... (7: 74)

''...உங்கள் ரப்பு உங்களது விரோதியை அழித்து பூமியில் உங்களைப் பிரதிநிதிகளாக வைக்கக் கூடும். நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்று கவனிப்பதற்காக... (7: 129)

அப்பால் அவர்களுக்குப் பிறகு நாம் உங்களை பூமியில் பிரதிநிதிகளாக்கினோம். நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்று நாம் காண்பதற்காக (10: 14)

— மௌலானா மௌதூதி (ரஹ்)

என்ற வசனங்களிலும் மனிதன் பூமியில் இறைவனின் பிரதிநிதியாக இருக்கிறான் என்றே காண்கிறோம். ஆனால் மனிதர்கள் பூவுலகின் உண்மை எஜமானனான அல்லாஹ்வின் சட்ட விதிகளைப் பின்பற்றி வாழாவிட்டால் அவர்கள் அவனது உண்மையான பிரதிநிதிகளாக ஆவதில்லை. அல்லாஹ்வின் சட்டதிட்டங்களை மதிக்காது தாங்கள் விரும்பிய படி சட்டதிட்டங்களை வகுத்து பரிபாலனம் செய்யும் ஆட்சிமுறையை மனிதர்கள் நாடினால் அது கிலாபத் ஆட்சி முறையாகாது. மாறாக உண்மை ஆட்சியாளனான அல்லாஹ்வுக்கு எதிரான புரட்சியாகவும் வரம்பு மீறிய செயலாகவுமே அது அமைந்துவிடும்;

அவனே பூமியில் உங்களை பிரதிநிதிகளாக ஆக்கியிருக்கிறான். எனவே எவன் அல்லாஹ்வுக்கு மாறு செய்கிறானோ அது அவனுக்கு கேடாகவே முடியும். நிராகரிப்போருக்கு அவர்களது நிராகரிப்பு அவர்களது இறைவனிடத்தில் கோபத்தையே அதிகரிக்கச் செய்யும்; மேலும் காபிர்களுக்கு அவர்களின் குப்ர் நட்டத்தையே அதிகமாக்கும்'' (35: 39)

(நபியே) உயர்ந்த தூண்களைக் கொண்ட இரம் என்னும் உயரமான ஆத் மக்களை உங்களது இறைவன் என்ன செய்தான் என்று நீங்கள் கவனிக்கவில்லையா? அவர்களைப் போன்றவர்கள் பூமியில் என்றுமே படைக்கப்படவில்லை; மலையடிவாரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாறைகளைக்குடைந்து அதில் வசித்துவந்த ஸமூத் கூட்டத்தார்களையும் இன்னும் (மிக்க அதிகாரபலம் பெற்றிருந்த பிர்அவ்னையும் (உங்கள் இறைவன் என்ன செய்தான் என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா. (89: 6-10)

(மூஸா) நீங்கள் பிர்அவ்னிடம் செல்லுங்கள் அவன் வரம்பு மீறிவிட்டான். பாவங்களைவிட்டு பரிசுத்தமாக நீ விரும்புவாயா என்று அவனிடம் கேளுங்கள். அப்படியானால் இறைவனிடம் இட்டுச் செல்லும் வழியை உனக்கு நான் காட்டுவேன். நீ அவனுக்கு அஞ்சி நடக்க முடியும் என்றும் கேளுங்கள். மூஸா அவனுக்கு பெரிய அத்தாட்சியையும் காண்பித்தார். எனினும் அவன் அதைப் பொய்ப்படுத்தியதோடு ஏற்கமறுத்தான். அவனது புறக்கணித்து வேகமாக வெளியேறினான். பின் மக்களை ஒன்றுகூட்டி நானே உங்களது மேன்மைக்குரிய கடவுள் என்று பிரகடனம் செய்தான் (79: 17-24)

உங்களில் விசுவாசங்கொண்டு மார்க்கமான நடத்தையுடையோராகவுமுள்ளவர்களை. அவர்களுக்கு முன் வாழ்ந்தவர்களான அவன் தனது பிரதிநிதிகளாக்கியதுபோல இவர்களையும் நிச்சயமாக பூமியில் பிரதிநிதிகளாக்குவதாகவும், அவர்களுக்கென்று அவன் ஏற்றுக்கொண்டுள்ள அவர்களது மார்க்கத்தை அவர்களுக்கு ஸ்திரமாக்கி வைப்பதாகவும் அவர்களுக்குள்ள பயத்தை நீக்கி பாதுகாப்பையும் தருவதாகவும் நிச்சயமாக அல்லாஹ் வாக்களித்திருக்கிறான். அவர்கள் என்னை வணங்குகிறார்கள். அவர்கள் எனக்கு எதையும் இணைகற்பிப்பதில்லை...

(24; 55)

என்ற வசனங்கள் மனிதன் இறைவனுடையவும் அவனது தூதர் அவர்களதும் சட்டங்களை ஏற்க மறுப்பது அவர்களுக்கு எதிரான புரட்சியாகும் அதனால் அழிவே உண்டு என்று உணர்த்துகின்றன; எவர் அல்லாஹ்வுக்கும் அவனது தூதர் அவர்களுக்கும் முற்றாக வழிப்பட்டு நடக்கிறார்களோ அவர்களே உண்மையில் அல்லாஹ்வின் கலீபாக்களாக விளங்குகிறார்கள் அவர்களுக்கே அல்லாஹ்வின் உதவியும் வெற்றியும் கிடைக்கும் என்றும் விளக்குகின்றன.

## எல்லா விசுவாசிகளுக்கு உள்ள உரிமை

அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற இந்த கிலாபத் ஒரு தனி மனிதனுக்கு மட்டுமோ அல்லது ஒரு குறிப்பிட்ட குடும்பத்தவர், குலத்தவர் இனத்தவர் எவருக்கு மட்டுமோ உரியதல்ல. முன்னர் குறிப்பிட்டவாறு அல்லாஹ்வினதும் ரஸூலினதும் ஈமான் கொண்டு அவர்களின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தமது ஆட்சியை அமைத்துக் கொள்ளும் அனைவருக்கும் உரித்துடைய பிரதிநிதித்துவமாகும். 'நிச்சயமாக அவன் அவர்களைப் பூமியில் பிரதிநிதிகளாக்குவான்' என்ற (24: 55) பகுதி இந்தக் கருத்தை நன்கு காட்டுவதாகவிருக்கிறது.

எனவே விசுவாசிகளாயுள்ள ஒவ்வொருவரும் இந்த அடிப்படையில் கிலாபத் உரிமையுடையவராகிறார். ஆதலால் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உரித்துடையதான இந்த கிலாபத்தை அபகரித்து தனதாக்கிக் கொள்ள எந்த ஒரு மனிதனுக்கோ ஒரு குழுவுக்கோ எவ்வித அதிகாரமுமில்லை. இவ்வாறே அல்லாஹ்வின் கலீபா — பிரதிநிதி என்ற நிலையில் ஏனைய முஸ்லிம்களுக்குப் பங்கில்லை அது தனக்கு மட்டும் உரித்தானது என்று எந்த ஒரு மனிதனோ அல்லது எந்தவொரு குடும்பமோ வாதிடவும் முடியாது. முடியாட்சி, சில குறித்த வர்க்கத்தவரின் ஆட்சி, அல்லது மதகுருக்களின் ஆட்சி என்பன போன்ற ஆட்சி முறைகளிலிருந்து இஸ்லாமிய கிலாபத்துறை இந்த வகையில் வேறுபடுகிறது. அது இந்த வகையில் ஜனநாயக அமைப்புடன் ஓரளவு ஒத்து வருகிறது. ஆனால் மேல்நாட்டு ஜனநாயக அமைப்புக்கும் கிலாபத் முறைக்குமிடையில் மிகமுக்கியமான ஓர் அடிப்படை வேறுபாடுண்டு. மேல் நாட்டு ஜனநாயகம் மக்களின் இறைமையை அடிப்படையாகக் கொண்டது. இஸ்லாமிய கிலாபத் அமைப்பில் மக்கள் அல்லாஹ்வின் இறைமையில் விசுவாசமுடையோராகவும் அல்லாஹ்வின் சட்டவரம்புகளுக்கு உட்பட்ட முறையில் தமது அதிகாரங்களை அமைத்துக் கொள்வதில் அவர்கள் பரிபூரணமான சுதந்திரம் உடையவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

மௌலவி ஏ. எல். எம். இப்ராஹீம்

**அல்ஹஸனாத் சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப் பிரதி | 7.50 |
| ஒரு வருட சந்தா | 100.00 |
| 6 மாத சந்தா | 50.00 |
| 3 மாத சந்தா | 25.00 |
| வெளிநாட்டுச் சந்தா | |
| இந்தியா, பாகிஸ்தான், மலேசியா மாலைதீவு, சிங்கப்பூர் | 300.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் | 350.00 |
| ஏனைய நாடுகள் | 400.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஓர் உண்மைச் சம்பவம். பெயர்கள் மட்டுமே மாற்றப்பட்டுள்ளன—! ஆதரவற்ற எந்தப் பெண்களுக்கும் சமுதாயத்தின் பாதுகாப்பும் உதவியும் கிடைக்காவிட்டால் நிலைமை என்னவாகும் என்பதற்கு ஜெனட் ஓர் அருமையான எடுத்துக்காட்டு!

# இனிவரும் காலங்களில்....?

"சீ கையை விடு. ஏதோ வயிற்று பாட்டுக்கு வேலைசெய்ய வந்தா பொம்பளைங்களை என்ன மட்டமா எடை போட்டுட்டீங்க"... மேஸ்திரியின் கையை தட்டிவிட்ட ஜெனட் தலையிலிருந்து பாண்டு, மட்டப்பலகையை விசிறிவிட்டு ஸ்டோர் ரூமிலிருந்து வெளியேறினாள்.

"என்ன பூமா பயப்படுறே. இன்னிக்கு எல்லாரையும் சீக்கிரமா வேலையை விட்டு அனுப்பிட்டேனே. உன் வாழ்க்கையை ஏன் இப்படி வீணாக்குறே"... மேஸ்திரி காவிப்பற்கள் தெரிய ஜெனட்டை நெருங்கினார்.

"பார்க்கிறதுக்கு பெரிய மனுஷனாட்டம். என்ன கீழ்மைபுத்தி. நீ அங்கேயே நிட்ட வந்தே இதோ இந்த கடப்பாரையாலேயே மண்டையைப் பொளந்துடுவேன்"... கீழே கிடந்த கடப்பாரையை கையில் எடுத்தவுடன் மேஸ்திரி நிதானப்பட்டார்;

சாப்பாட்டுப் பையையும், ஆணியில் மாட்டியிருந்த புர்காவையும் எடுத்துக்கொண்ட ஜெனட் புதிதாக எழும்பிக் கொண்டிருந்த கட்டடத்திலிருந்து வேகமாக வெளியேறினாள்.

"போடியா போ. சோத்துக்கு வாட்டிய அடிச்சிக்கிட்டிருந்த உனக்கு வேலை கொடுத்து ஆதரித்தேன் பாரு... இனி உனக்கு எவன் வேலை கொடுக்கிறான்னு பார்த்துடுறேன்"—மேஸ்திரி கோபமாக கத்தினார்.

இஷாவை தொழுது முடித்த ஜெனட்டுக்கு நெஞ்சம் கனத்திருந்தது. நடந்த சம்பவம் நினைவில் புரள குர்ஆனை ஓத ஆரம்பித்தவளுக்கு, மனம் அதில் லயிக்கவில்லை.

கணவனின் அகால மரணத்தின்போது சித்தப்பிரமை அடைந்ததைப் போல் நிலைகுலைந்திட்டாள் ஜெனட். செல்வந்தவளாக வாழ்ந்து விட்டவளுக்கு எதிர்காலம் கேள்விக்குறியாக பயமுறுத்தியது. மூன்றரை வயதில் ஒரு குழந்தையான மும்தாஜும் ஐந்து வயதே நிரம்பிய இக்பாலும், வயது முதிர்ந்த தாயாரும் குடும்பச் சுமையானார்கள். அக்கம் பக்கத்திலிருந்து மரணத்திற்கு வந்த உறவினர்கள், 'பிரச்சினைகளில்' சிக்காமலிருக்க மறுநாளே மழுப்பலுடன் நழுவி விட... துக்கம் விசாரிக்க வந்த பள்ளிவாசல் நிர்வாகிகள் ஒரு ஆறுதலுடன் விடைபெற தனிமரமானாள் ஜெனட். வாயிற்கும் வயிற்றுக்குமாக இருந்த கணவனின் சம்பாத்தியத்தில் மிச்சப்படுத்தி வாங்கியிருந்த "காணி போத்" சில நாள் பணமாகமாறி கைகொடுத்தது. அதுவும் கரைந்த போதுதான் ஜெனட் "சித்தாளானாள்."

ஜெனட் வேலைக்குப் போகத் தொடங்கிய பிறகு அவள் மீது தான் எத்தனைப் பார்வைகள்! எத்தனைக் கோணங்களில்! போவோரும் வருவோரும் வாலிபர்களின் கிண்டல் பேச்சுகளுடன், பெண்களின் "காது பட" பேச்சுகளும் தொடர்கதையாக... உழன்றாள். வயதான தாயார் கண்களில் நிழலாட மௌனமானாள் ஜெனட். மீண்டும் மேஸ்திரி வடிவில் உண்டான சோதனை அவளை நிலைகுலைத்தது.

கண்களில் திரண்ட நீர் சூடாக புறங்கையில் பட்டவுடன் சுய நினைவுக்குத் திரும்பிய ஜெனட் கண்களை துடைத்துக் கொண்டு திரும்ப ஓத ஆரம்பித்தாள்.

முன்னியை மடியில் அணைத்துக் கொண்டு தாய் தூங்கிக்கொண்டிருக்க, இக்பால் தலையில் விரித்த தொப்பியுடன் அருகில் வந்து அமர்ந்தான்.

"உம்மா அழுறீங்க..? வாப்பா ஞாபகம் வந்துடுச்சா..! மழலையில் இக்பால் கேட்ட கேள்வி மீண்டும் அழுகையைத் தூண்ட கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

தொடர்ந்த இக்பால், "நாமளும் வாப்பா போல இடத்துக்கே போயிடலாம்மா"... என்றவுடன் அழுகை பீறிட்டு கிளம்பியது.

"இக்பால், அப்படிச் சொல்லாதேப்பா... நீயும் முன்னியும் பெரி...சா வளரணும். நல்லா படிக்கணும், சம்பாதிக்கணும். அப்புறமா அதோ தூங்குறாங்களே உங்க பாட்டியம்மா அதுபோல, தலை நரைச்சு வெள்ளையாகுற வரைக்கும் நீங்க வாழணும்" உச்சி மோந்தாள்.

"சரி கொஞ்சம் குர்ஆனை ஓதுங்கம்மா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜைனப் சற்று ஓதி நிறுத்தி னாள்.

''இன்றைக்கு என்னம்மா சொல் றாய்?''—இக்பால் கேட்க,

ஜைனப், ''விசுவாசிகளே நீங்கள் உங்களுக்கு மற்றொருவர், நன்மை யானவற்றில் உறுதுணையாக இருந்துக் கொள்ளுங்கன்னு சொல் றாம்பா'' என்றாள்.

'',விசுவாசிகளென்ன யாரும்மா?''

''நாம... பக்கத்துவீட்டு கல் தான், அவ்னா இன்னும் ஜகபர் இவங்களெல்லாம்பா.''

''அப்போ நமக்கு இவங்க ஏம்மா துணையாயிருக்கமாட்டேங் கறாங்க. நான்போனா சரியா கூட பேசமாட்டேங்கறாங்களே ஏம்மா...?''

இக்பாலின் வயதுக்கு மீறிய வினாவிற்கு விடைகொடுக்க இய லாத ஜைனப், ''சரி... சரி... நாளைக்கு ஸ்கூலுக்கு நேர மாச்சு தூங்கப்பா.'' பேச்சை துண்டித்தாள்.

''உம்மா பசிக்குது... இல்லே இல்லேம்மா, சோறு நமக்கு சொந் தமில்லேன்னு சொன்னத மறந்து போச்சு, இருங்க தண்ணி கொண் டாறேன்.''

இக்பால் நீட்டிய நீரை குடித்து விட்டு, பக்கத்தில் படுக்க வைத் துக் கொண்டாள், மனம் கனமை யாக அழுதது.

''அதோ! எப்படி பூனை மாதிரி பூட்டின மாட்டிகிட்டுவராப் பார். இத்தனை நாள் கூட, குளவிக் கிட்டிருந்த மேஸ்திரி இவன விரட் டிட்டாம் போயிருக்கு - அதான் அம்மா இப்ப வேலைக்கு போறு தில்லே... ம... இவ பொழைப்புக்கு வேலையா கிடைக்காது. மேஸ்திரி விட்டா இன்னொருத்தன் நமக் கென் வயாவமுடி புறம் போறது குற்றமுனு அல்லாஹ் சொல்றா னாம்'' வார்த்தைகளின் கூர்மை யில் தண்ணீர் எடுக்க வந்த ஜைனப் பெண்கள் பதம் பார்த் தார்கள். வாயில் வேதனையை பொறுமையாக தாங்கிக் கொண் டாள் ஜைனப்.

''லொக்... லொக்...'' — கை பம் பும் அவனை கேலி செய்வதைப் போல சத்தமிட்டது.

''ஜைனப் ஒரு வாரமா ஏம்மா வேலைக்கு போறதில்லே.. - ஜைன பின் தாய் கேட்டாள்.

''மேஸ்திரியின் பழிவாங்கும் படலத்தில் விளைவாக இரண்டு மூன்று இடங்களில் கூலி வேலை கேட்கப்போய் அவர்களிடம் பட்ட வேதனைகளை உள்ளுக்குள் ஜீர ணித்துக் கொண்ட ஜைனப்.

''உடம்பு சரியில்லேம்மா'' -பதி லளித்தாள்.

''என்னது கொஞ்சம் சத்தமா சொல்லுமா... வர வர கண்பார் வையைப் போலவே காதும் சரியா கேட்க மாட்டேங்குது'' - தாய் அங்கலாய்த்துக் கொள்ள, அருகில் சென்ற ஜைனப், சத்தமாக சொன்னாள்.

இரவு சுவர்கோழிகளின் இசை யில் கரிந்துக் கொண்டிருந்தது.

''டக்... டக்''-கதவு மெல்ல தட் டப்பட வாரி சுருட்டிக்கொண்டு எழுந்த ஜைனப் யைத்தரை துவ ழுனாள்.

கதவிடம் நெருங்கி, ''யாரது?'' என்றாள்.

''நான்தான்'' - பதில் மெல்லிய குரலில் கிடைத்தது

வேகமாக திறந்து பார்த்தப் போது மஸ்ஜித் நிர்வாகக்கமிட்டி யின் துணைச்செயலாளர் நின்று கொண்டிருந்தார். கவலையின் மர ணத்தின் போது, அதிகமாக ஆறு தாலப்பட்டு ஆறுதல் சொன்னவர் கதவுப்புறம் ஒதுங்கி நின்று கொண்டாள்.

''என்ன?''

''ஜைனப் பயப்படாதே! நான் இங்கு வந்தது யாருக்கும் தெரி யாது. இந்த மேஸ்திரி பய வந்து என்னவோ கதை சொன்னான், நான் அதெல்லாம் நம்பலே, அவன் கிடக்கிறான் '',காஃபிர்'' பய நீ கவலைப் படாதே ஜைனப் உன்னை யும் பிள்ளைகளையும் கண்கலங்காம நான் காப்பாத்துறேன். இந்தா இத வச்சுக்கோ''- நீட்டிய கை யில் கத்தையாக ரூபாய் நோட்டு களிருந்தன.

ஜைனபிற்கு விர்ரென்று கோபம் உச்சந்தலைக்கு ஏற-

''மரியாதையா போயிடு!..'' கதவை அறைந்து சாத்தினாள்.

''ம்... உனக்கு இவ்வளவு திமிரா அந்த மேஸ்திரியை விட நான் எந்த விதத்திலே குறைஞ்சவன். இரு... இரு உன்ன கவனிச்சுக் கிறேன்'' இருளில் சென்று மறைந் தார்.

ஜைனபிற்கு மேஸ்திரியின் உரு ட்டல் ஞாபகம் வந்தது. அதை தொடர்ந்து அவனுடைய பிரசா ரத்தில் வேகமான போக்கு இப் படி திசை திரும்பும் என்று ஜைனப் எதிர்பார்க்கவில்லை.

''ச்சே என்ன மனிதர்கள்'' -முணுமுணுத்துக் கொண்டே கத வைத் தாளிட்டு திரும்ப-

''என்னம்மா ஜைனப் ஏதோ சத்தம் கேட்டதுப் போலிருக்கு?'' -தாய் உட்கார்ந்திருந்தாள், கிட் டப்போன ஜைனப், ''ஒன்னு தாக் ஜுன்னு கதவை உரசிகிட்டுமா... விரட்டிட்டு வந்தேன்'' - தெளிவான குரலில் சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரண்டு படுத்த ஸைனபிற்கு தூக்கம் வரவில்லை. அழுதழுது கண்களில் நீரும் வரவில்லை. நினைவுகளின் ஆழத்தில் மூழ்கிக் கொண்டிருந்த ஸைனபிற்கு அந்த மாதுறைவாசியிருக்க "இஸ்லாமிய இளைஞர் மன்றத்தின்" ஞாபகம் வந்தது. அவர்களிடம் உதவி கேட்க தீர்மானித்தவள் நினைவுகளுடன் சங்கமமாகி உறங்கிப் போனாள்.

இஸ்லாமிய இளைஞர் மன்றம்-பெயர் பலகையுடன் ஸைனபை வரவேற்றது. எட்டிப் பார்த்தாள்; உள்ளே-

"இந்த வாரம் வீடியோவிலே அண்ணன் படம் தான் போடணும்"

"இல்லே அடுத்த வாரம் அத போடலாம். இந்த வாரம் தலைவர் படம் தான்." சூடான விவாதம் நடந்து கொண்டிருந்தது.

"சரி.. சரி கொஞ்சம் அதிகமாக கலெக்ஷன் பண்ணுங்க. ரெண்டு படமும் சேர்த்தே போட்டுடலாம்" -நடுவில் ஒரு குரல் குறுக்கிட்டு சமாதானப்படுத்தியது.

ஸைனப், "பாய்.. பாய்" அழைத்தாள்.

வெளியே வந்து எட்டிப்பார்த்த ஒருவர், "பாய் யாரோ ஒரு பொம்பளை வந்திருக்காங்க" என்றார்.

ஸைனப் புர்காவை சரி செய்து கொண்டாள். வந்தவருக்கு சலாம் சொன்னாள்.

"சமீபத்துலே மவுத்தாயிட்டாரே காலித்பாய் நான் அவருடைய சம்சாரம்," திருத்தினாள். வந்து நின்ற இளைஞர் "சொல்லுங்க" என்றார்.

ஸைனப் தொடர்ந்தாள்... "எனக்கு ஓதிக்க தெரியும் அவரு போனதிலேயிருந்து குடும்பம் ரொம்ப கஷ்டப்படுது. பசங்க சாப்பாடில்லாம தவிக்கிறாங்க... பசங்களை சேர்த்து ஒரு மதரஸா மாதிரி ஏற்படுத்தி எனக்கு ஏதாவது கணிசமான அளவு சம்பளம் கொடுத்தா நல்லாயிருக்கும். உங்க சகோதரி மாதிரி நினைச்சுகிட்டு எனக்கு உதவுங்க பாய்" - சொல்லும் போதே ஸைனபிற்கு நா தழுதழுத்தது. கண்களில் நீர் திரண்டது.

"கூப்பிட்டா யாருமா ஓதிக்க வரப்போறாங்க. அவங்கவங்க பள்ளி பாடம் படிக்கிறதுக்கு அவங்களுக்கு நேரமில்லே. நேராப் போய் பள்ளி வாசல் நிர்வாகிகிட்டே முறையிடுங்க" இளைஞர் வேகமாக மன்றத்தினுள் சென்று விட்டார்.

மீண்டும் உள்ளே விவாதம் ஆரம்பித்தது:

"சரி... நம்ம பாபா அருள் சுந்தரி எடுத்து. அதுக்கு இப்ப மார்க்கெட்டுல "ஹாட்டா"-சக்சேஸ் செய்றவங்க யாருன்னு பாருங்க... எவ்வளவு பணம் செலவானாலும் சரி..."

சிறிது நேரம் நின்றிருந்த ஸைனப் விரக்தியுடன் திரும்பினாள்.

வீட்டிற்கு முன்னிருக்கு கடுமையான தூரம். தாயார் சொல்லு பசிகளை வைத்தியங்களுக்குப் பயணத்துப் போன போது ஸைனபிற்கு அழுகை பீறிட்டது. கண்களைத் துடைத்துக் கொண்டு ஸைனப் எழுந்தாள்.

"பாவா"- கண்ணாடியைச் சரி செய்துக் கொண்டே மோதினார் "யாரது?" -என்றார்.

"நான் தான், மவுத்தாயிப்போன காலித் பாயின் சம்சாரம்"

"என்னம்மா விஷயம்?" அழுதுக் கொண்டே தன்னுடைய நிலையை விளக்கினாள். அது அவர் மனதை தொட பள்ளிவாசலினுள் சென்றார்.

உள்ளிருந்து நாலைந்து பேர் வந்தார்கள். அதில் இரவில் கதவைத் தட்டிய துணைச் செயலாளரும் இருக்கக் கண்ட ஸைனப் திடுக்கிட்டாள்.

"என்ன மோதினார் எஞ்சினியர் இன்னும் வரலியா?"

"வர்ர நேரந்தான் முத்தவல்லி சாப். இந்தம்மாவுக்கு ஏதோ உதவி வேணுமாம். நம்ப காலித் பாய் சம்சாரம்" மோதினார் மெல்ல சொன்னார்.

"என்னமா வேணும்?"

"பாபா...குடும்பம் ரொம்ப நெருக்கடியிலேயிருக்கு. ஏதாவது வேலையிருந்தா கொடுங்க. கக்கூஸ் கழுவுற வேலையாயிருந்தாலும் பரவாயில்லே. அதைச்செஞ்சுகிட்டு கௌரவமா வாழுறேன்—" ஸைனப் நிலைமையை விளக்கினாள்.

"என்னமாயிது...? எம்ப்ளாய்மென்ட் ஆபீஸா வேலை கொடுக்கிறதுக்கு"

"பாய் எண்ணூறுதனதக்கு உடம்பு முடியாம கிடக்கு. ஏதாவது உதவுங்க." ஸைனபிற்கு கேவலுடன் அழுகை வந்தது.

"இதென்னம்மா தொந்திரவா போச்சு. இதெல்லாம் கவர்மெண்ட் வேலை. இங்க வந்து, ஏன் தொந்திரவு செய்யறீங்க" முத்தவல்லி கடிந்துக் கொண்டார்.

முத்தவல்லி சொல்றாரில்லே! புரியலே- விட்ட வந்த துணைச் செயலாளரின் பார்வையில் அவளைப் பழி வாங்கிவிட்ட திருப்தி!

"அதோ வந்துட்டாரே எஞ்சினியர்"......

"வாங்க.. வாங்க... எஞ்சினியர் சார்" இங்கதான் பெருசா ஒரு மினாரா கட்டணும். இந்த பக்கத்துலே அதுப்போல எங்கேயும் இருக்கக்கூடாது. எவ்வளவு செலவானாலும் பரவாயில்லே..."

கேட்ட எல்லோரும் கண்டு பல நாட்களாகிருக்கது! இதிச்சிட்டது. வெளியேறினாள் ஸைனப்.

குர்ஆனை திறந்த ஸைனபிற்கு அந்த வசனத்திலேயே பார்வை நிலைத்தது. "விசுவாசிகளே! நீங்கள் நன்மையான காரியங்களில் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்து கொள்ளுங்கள்" கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் பெருகி, குர்ஆனின் பக்கங்களை நனைத்தது.

முன்னிரவில் முனகிக் கொண்டிருந்தான் எலும்பும் தோலுமாக இப்போது படுத்திருக்க வயதான தாய் இருமிக் கொண்டிருந்தாள். இன்னும் எத்தனை நாளைக்குப் பட்டினி கிடப்பது!

மெல்ல எழுந்து ஸைனப் குர்ஆனை உறையிலிட்டு இறுக்க மூடி போட்டாள். தாக்காலி மீது ஏறி உயர்ந்த பரண்மீது வைத்தாள்.

கொடியில் இருந்த புர்காவை இரண்டாக கிழித்தாள்: இடுப்பில் குளிருக்கு இதமாக அதை அணைத்துக் கொண்ட மற்றதை முன்னி மீது போர்த்தினாள்.

கதவைத் திறந்தாள்: எங்கோ ஒரு நாய் ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

ஸைனப் துணைச் செயலாளரின் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்! நன்றி - சமரசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸாபத், அர்ரிஸாலத் என்ற பத்திரிகைகளில் அவரது கட்டுரைகளும் விமர்சனங்களும் வெளிவந்தன. பட்டதாரியான பின் அவர் கல்வி அமைச்சில் ஒரு கல்வி அதிகாரியாகக் கடமையேற்றார். எழுத்திலும் வாசிப்பிலும் இருந்த ஆர்வம் காரணமாக ஒரு சில வருடங்களில் அவர் தமது பதவியை விட்டுவிலகி எழுத்துப் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டார். அரபு மொழியில் கிடைத்த நூல்கள் யாவற்றையும் வாசித்தார். நிறைய எழுதினார். இதனால் அவரது அறிவு வளர்ந்தது. அறிஞர் மத்தியில் அவரது புகழும் பரவியது. தாஹா ஹுஸைன், அல் அக்காத், மாஸினி, அல் ராபிஈ போன்றோருடன் சம தரத்தில் கணிக்கப்படுமளவு அவரது அந்தஸ்து உயர்ந்தது.

## குர்ஆனுடன் அதிக தொடர்பு

அவர் 1939ல் அல் முக்ததப் என்ற சஞ்சிகையில் 'அத் தஸ்வீர் அல் பன்னிய்யு பில் குர்ஆன்' என்று குர்ஆனின் விழுமிய கருத்துக்களையும் இலக்கியச் சிறப்பையும் பற்றி ஒரு கட்டுரை எழுதினார். இது ஸெய்யித் குதுப் அவர்களுக்கு குர்ஆனுடன் ஏற்பட்ட இறுக்கமான உறவைத் தொட்டுக் காட்டுவதாக அமைந்தது. 1945ல் 'அத் தஸ்வீர் அல் பன்னிய்யு பில் குர்ஆன்' 'மஷாஹிதுல் கியாமதி பில் குர்ஆன்' என்ற குர்ஆன் பற்றிய இரண்டு நூல்களை வெளியிட்டார்.

1948ல் அவர் எழுதிய 'மதாரிஸ் லிஸ்ஸக்த்' என்ற கட்டுரை அவர்களின் இஸ்லாமிய அணுகு முறையைப் பிரதிபலித்தது. எளிய மக்களின் உற்றவர்களிடமும் மற்றவர்களிடமும் நிலவிய உலகாயத ஆர்வத்தையும் இஸ்லாத்துக்கு மாறான பண்பாட்டு பழக்க வழக்கங்கள், நீதி, நிர்வாகம் போன்றவற்றையும் அவர் அதில் கண்டித்தார். மேலும் நன்மையின் பால் மக்களை அழைத்து அங்கீகரிக்கப்பட்டவற்றை ஏவி தீய பாவகாரியங்களை தடுத்து விலக்கும் ஒரு சாரார் உங்களில் இருக்க வேண்டும் என்ற குர்ஆனியக் கருத்தை முன்வைத்து இப்பணிகளுக்கு மக்கள் விழித்து எழ வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். 1949ல் 'அல் அதாலதுல் இஜ்திமாஇய்யா பில் இஸ்லாம்' என்ற இவரது புகழ்பெற்ற மற்றொரு நூல் வெளிவந்தது. அதில் இஸ்லாம் கூறும் சமூக நீதியின் சிறப்பை நன்கு விளக்கிய அவர் மனித சமுதாயம் விரும்பும் அனைத்து விதமான பாதுகாப்புகளும், நீதி முறைகளும் இஸ்லாத்தில் மட்டுமே முழு அளவில் உண்டு என மிகவும் அழுத்தம் திருத்தமாக விளக்கினார்.

## கண்ணாரக் கண்டார்

ஸெய்யித் குதுப் அவர்கள் உயர்கல்விக்கான புலமைப் பரிசில் பெற்று 1948ல் அமெரிக்காவுக்குச் சென்றார்; அங்கு வாஷிங்டனிலும் கலிபோர்னியாவிலும் இரண்டாண்டு காலம் கல்வி பயிற்றுவிக்கப்பட்டார்; ஏற்கனவே இஸ்லாமியக் கருத்துக்களால் கவரப்பட்டிருந்த அவருக்கு மேல் நாட்டு நாகரிகத்தில் அருவருப்பான காட்சிகள் அந்நாகரிகத்தின் மீது மேலும் அதிக வெறுப்பையூட்டின. அவர் அமெரிக்காவில் இருந்த போது எகிப்தில் தனது நண்பர் எழுத்தாளர் தௌபீக் அல் ஹகீமுக்கு எழுதிய கடிதத்தில் சடவாத நாகரிகத்தின் கேவலமான நிலைமைகளை தாம் நேரில் கண்டது பற்றிக் குறிப்பிட்டிருந்தார்; நேசிக்கும் மக்களை வழிநடத்த, அந்த ஒரே வாழ்க்கை முறையான இஸ்லாமிய அடிப்படையில் தனது எழுத்துக்களை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டார்.

அமெரிக்கா செல்லு முன் ஸெய்யித் அவர்களுக்கு 'அல் இக்வானுல் முஸ்லிமூன்' இயக்கத்துடன் கொள்கை வழி உறவிருந்த போதிலும் உத்தியோக பூர்வமான தொடர்பிருக்கவில்லை. இந்த நூற்றாண்டில் இஸ்லாமிய மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க செயல் திறனும் பலமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருவதையும் அவரது கருத்துக்களும் முயற்சிகளும் மக்களைப் பிரவேசமாகக் கவர்வதையும் கண்டு மேனாட்டார் அதிர்ச்சியடைந்தனர். எனவே அவர்களின் சூழ்ச்சிகளின் துணையோடு 1948ல் அல்பன்னாவைப் படுகொலை செய்தனர். இந்த பாதகச் செயலை நிகழ்த்து மேனாட்டார் பெருமகிழ்ச்சியடைகிறார்கள் என்பதை ஸெய்யித் அமெரிக்காவில் வாழ்ந்த போது கண்டார். இது மேனாட்டாரின் இஸ்லாமிய நடத்தைக்கு இவ்வாறு அங்கு எதிரான அவர்களது சதி முயற்சிகளுக்கு ஒரு நல்ல சான்றாக அவருக்குத் தெரிந்தது. எனவே இஸ்லாமிய இயக்கத்தைப் பலப்படுத்துவதன் அவசியத்தை அவர் முன்னுணர்ந்தார். மறுமலர்ச்சி, மனித வியோகத்துக்கு குர்ஆனிய சமூகம் மீண்டும் தோன்ற வேண்டும் என்று எழுதிய அவரது எண்ணத்தை ஹஸனுல் பன்னாவின் அழகிய இயக்கத்தில் சேர்ந்தனர். எனவே அவர் படிப்பை இடைநிறுத்திக் கொண்டு எகிப்துக்குத் திரும்பினார். 'அல் அம்ரீகா அல்லதீ ரஅய்து' நான் கண்ட அமெரிக்கா என்ற ஒரு நூலை வெளியிட்டு நவீன நாகரிகத்தின் அசிங்கமான தோற்றங்களையும் முதலாளித்துவத்தின் கொடுமைகளையும் மக்களுக்குப் பற்றிய விளக்கினார். மனித இனத்தையும் ஒரு போதும் மனித சமுதாயத்துக்கு எதிரான சோதனைக்காலமே, அதனால் மக்கள் இறை தூதரின் வழியை நாடிவந்தே ஒரே வழிபாடும் வெற்றி தரும் அனுபவ ரீதியான கருத்தை அதில் அவர் அழுத்தமாக விளக்கினார். 1951ல் அவர் எழுதிய நூல்களில் இஸ்லாத்துக்கு மாறான கருத்துக்களை ஆராய்ச்சியாக பகுத்தாய்ந்து அவர் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து அவரின் மனப்பிரதிபலிப்பை நன்கு அறியமுடிகிறது.

(இன்ஷா அல்லாஹ் இன்னும் வரும்)

# ஆசிரியருக்கு

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைப் பற்றி 'ஆசிரியருக்கு' எழுதும் கடிதங்களில் தகுதி வாய்ந்தவை இப்பகுதியில் பிரசுரிக்கப்படும். கடிதங்கள் சுருக்கமானவும் தனிப்பட்ட முறையில் எவரையும் தாக்காது உண்மையை உள்ளடக்கியதாகவும் இருக்கவேண்டும். சொந்தப் பெயரும், முகவரியும் குறிப்பிடப்படாத கடிதங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. புனைப்பெயரில் எழுதப்படும் கடிதங்களிலும் அலுவலக உபயோகத்துக்காக சொந்தப் பெயரும் முகவரியும் தரப்படவேண்டும்.

ஆசிரியருக்கு எழுதும் கடிதங்களின் உள்ளடக்கத்துக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாளிகளாக இருப்பர். — ஆசிரியர்

## இது பாவமாம்

சென்ற மாதம் மெழுக்கெல்லையில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தப் பயங்கரமான பாதகச் செயலைப் பற்றி மேலும் முஸ்லிம்களிடம் ஒத்த கருத்து நிலவவில்லை. இதைக் காணும் போது மனம் வெடிக்கப் பார்க்கிறது!

''அவர்கள் செய்த பாவங்களுக்காக அவர்களுக்கு இந்தக் கதி நாம் தப்பி நடப்போம்'' என்று சிலர் கூறக் கேட்டேன். அது மாத்திரமல்ல அகதிகள் நிவாரணப் பணியும் கூட இவர்களின் கருத்துப்படி ''துன்யாவுடைய வேலை''தான் இப்படியும் சொல்கிறார்கள். படைத்தவன் ரிஸ்க் அளிக்கிறான். ஆகவே நாமேன் இந்த வேலை என்றல்லவா சொல்லுகிறார்கள்,

ஆப்கானில் முஸ்லிம்கள் அழிக்கப்பட்ட நேரத்திலும் இப்படிச் சிலர் கூறக்கேட்டேன். கொலை செய்யப்படுபவர்கள் குற்றம் செய்த பாவிகள் என்று கருதும் இவர்கள் கொன்று குவிக்கும் பாவிகளை ஸாலிஹீன்கள் என்று நம்புகிறார்களோ தெரியவில்லை!

இப்படியான அபத்தமான கருத்துக்கள் சமூகத்தில் வளர்ந்தால் எதிர்காலம் என்னவாகும்? ஆகவே உலமாக்கள் இந்த விதமான சந்தர்ப்பத்திலாவது வாய் திறந்து பேசுவார்களா?

ஓர் அனுதாபி
பொலன்னறுவை

## மீலாத் காலத்தில்

இலங்கைச் சரித்திரத்தில் முன் எப்போதும் இல்லாத மாதிரி முஸ்லிம்கள் துன்பப்படும் காலம் இது. இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாக சொந்த ஊர்களை விட்டு வெளியேறியிருக்கிறார்கள்; அவர்கள் முகாம் குடிசைகளில் வாழ்கிறார்கள். உண்பதற்கு போதுமான உணவுமில்லை. உடுக்க நல்ல உடையுமில்லை. இவர்களில் நேற்று வரை வசதிமிக்கவர்கள் நல்ல முறையில் சொந்த வீடுகளில் வாழ்ந்தவர்கள். வேலை செய்து சம்பாதித்து உண்டவர்கள். ஆனால் இன்று மற்றவர்களை எதிர்பார்த்து கூடாரங்களில் வாழ விடப்பட்டு விட்டார்கள்.

இந்த நிலையில் இவ்வருட மீலாத் காலம் வருகிறது. வழக்கமாக இந்த மாதத்தில் மௌலூதுகள் ஓதி அன்னதானம் வழங்குவது பல ஊர்களிலும் நடக்கிறது. ஒவ்வொருவரும் தனது சக்திக்கு ஏற்ப இதற்குச் செலவு செய்வார்கள். ஏழைகளும் கூட கந்தூரி கொடுப்பதுண்டு.

நபி (ஸல்) அவர்களிடம் அன்பு காரணமாக இந்த மாதிரி செய்கிறோம். ஏழைகளையும் வாழ வழியில்லாதவர்களையும் அகதி அனாதைகளையும் ஆதரித்த நபியிடம் அன்பு காட்டும் நமக்கு இந்த ஆண்டு ஒரு சோதனை போலும், நாங்கள் உண்மையில் நபியிடம் அன்பின் காரணமாக இப்படிச் செய்வதானால் இந்த வருடம் சாப்பாட்டை நிறுத்தி அந்தப் பணத்தை அகதிகளுக்காகச் செலவிட வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் தாங்கள் பசித்திருந்த போதும் பசித்தவர்களை ஆதரித்தார்கள். அப்படிச் செய்யும் படி மற்றவர்களையும் தூண்டினார்கள்.

ஒருவர் கொடுக்கும் கந்தூரிச் சோறு கிடைக்காவிட்டால் அந்த ஊரில் யாரும் பசியில் இருக்கப் போவதில்லை. ஆனால் ஒரிடத்தில் ஆக்கிப் பங்கிடும் கந்தூரிக்கான செலவை அகதிகளின் தேவைகளுக்காகச் செலவு செய்தால்
அவர்களின் பசி தீரும்;
அதனால் அல்லாஹ்வின் ரஹ்மத் கிடைக்கும் நபியைப் பின்பற்றியவர்களாகவும் ஆவோம்;

இப்படி மக்கள் கஷ்டப்படுகிற காலத்திலும் நாங்கள் எங்கள் வழக்கப்படிதான் செய்வோம் என்று கந்தூரி கொடுத்தால் அது உண்மையில் பழக்க தோஷமாகவே இருக்கும். நபியின் மீதுள்ள அன்பாக இருக்காது. ஆகவே இந்த வருஷம் நாமெல்லாரும் மீலாத் கூட்டங்களுக்கும் கந்தூரிக்கும் செலவிடும் பணத்தை அகதிகளுக்காகச் செலவிட்டால் எவ்வளவு நல்லது. அதே நேரம் உலமாக்களையும் படித்தவர்களையும் அழைத்து ஆடம்பரச் செலவுகள் இல்லாமல் பயான் செய்வதும் நல்லது.

உலமாக்கள் இவ்விதமான கருத்தை மக்களிடம் சொன்னால் அவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

முஜாஹிதா
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துக்களிருக்க நியாயமில்லை எனவே புரிந்துணர்வு காரியத்திறன் என்பவற்றோடு ஒவ்வொரு பிரிவினரும் சமூக முன்னேற்றத்துக்கு தங்களது பங்களிப்பை நிறைவாக வழங்க முன்வர வேண்டும். தொடர்ந்து ஒருவர் மற்றவரை அல்லாஹ்வுக்காக நேசிப்பதும் நல்ல காரியங்களிலும் சமூகத்தின் நலன் காப்பதிலும் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்தல், மற்றச் சகோதரர்களைப் பற்றி எப்போதும் நல்லதையே நினைத்தல், பிரச்சினைக்குரிய விஷயங்களில் கூடிய அளவு விட்டுக் கொடுத்து சகிப்புத் தன்மையோடு நடத்தல், நாம் எல்லோரும் முஸ்லிம்கள் என்ற வகையில் முடிந்தவரை இணைந்து காரியமாற்றுதல் என்பன தனிப்பட்ட முறையிலும் சமூக மட்டத்திலும் காணப்படவேண்டும்.

இது அசாத்தியமானதல்ல. இவ்வாறு செய்வதற்கு நீண்ட கால திட்டங்களும் விரிவான நடைமுறைகளும் தேவையில்லை. எங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கும் இறை நம்பிக்கையை — ஈமானை சற்றுத் தட்டிவிட்டால், போதும்.

"ஈயத்தை உருக்கி வார்க்கப்பட்ட அரணைப் போல ஓரே அணியாக நின்று தனது பாதையில் போராடுபவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான்." (61: 4)

— அஷ் ஷெய்க் நாஹிர் நூரி

---

(10ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். அதேபோல இவ்வித ஆராய்ச்சிக்குப் பயன்படும் கல்வெட்டுக்கள், பட்டயங்கள் கையடிகள், புத்தகங்கள் சஞ்சிகைகள் ஏனைய பொருட்கள் எதையும் தம்வசம் வைத்துள்ளவர்கள் ஆராய்ச்சிக்காகவும் பதிப்பிக்கவும் அவற்றைக் கொடுத்து உதவவேண்டும். பல்கலைக் கழகங்களில் தொல் பொருள் ஆராய்ச்சி பட்டப்படிப்புக்கும், பட்டப்பின்படிப்புக்கும் ஒரு பாடமாகப் போதிக்கப்படுகிறது. எனவே முஸ்லிம் மாணவர்களில் சிலரேனும் இத்துறையில் கல்வியும் பயிற்சியும் பெற்று ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

● இவ்வித ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு உதவுமுகமாக ஒரு நிதியத்தை ஏற்படுத்தல் ஆராய்ச்சிப் பொருட்களைப் பாதுகாத்து வைத்தல் முடிவுகளை அச்சிட்டு வெளியிடல் என்பன போன்ற நடவடிக்கைகளை எடுக்கும் ஒரு நிலையத்தை ஏற்படுத்துதல் என்பன பற்றி உங்கள் கருத்தென்ன?

● இவை மிகவும் முக்கியமானவை இந்த இரண்டுமில்லாவிட்டால் ஆராய்ச்சிகள் காற்றில் கலந்து காலத்தால் அழிந்து விடும்;

● கலாநிதி அவர்களே இத்துறை பற்றி நமது மக்களுக்கு மேலும் உணர்த்த உதவும் வகையில் சில கருத்தரங்குகளை ஏற்பாடு செய்வது பற்றி உங்கள் கருத்தென்ன?

● மிகவும் நன்று. இவ்வாறான முயற்சிகளுக்கு எனது முழுமையான ஒத்துழைப்பு என்றும் கிடைக்கும். இன்ஷா அல்லாஹ் ஜமாஅதே இஸ்லாமி இயக்கத்தைச் சேர்ந்த நீங்கள் இதில் காட்டும் ஆர்வத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

பேட்டி கண்டவர்: "மாணவன்"

---

## அண்ணல் நபி(ஸல்) அவர்களின் அறிவுரை

"இஸ்லாத்தின் சக்கரம் சுழன்றுகொண்டிருக்கிறது. நீங்களும் புனித இருக்குர்ஆன் கூறும் திசையில் சுழல்வதின் கவனமாக இருங்கள். விழிப்புடன் இருங்கள் வெகுவிரைவில் அரசியல் அதிகாரத்திலிருந்து திருக்குர்ஆன் பிரிந்து சென்றுவிடும். நீங்கள் எச்சரிக்கையாக இருக்காவிட்டால் நீங்கள் புனித திருக்குர்ஆனை இழந்து விடநேரிடும். வருங்காலத்தில் தமது சொந்த விருப்பு வெறுப்புகளை உங்கள் மீது திணிக்கக்கூடிய ஆட்சியாளர்கள் வருவார்கள். நீங்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தால் உங்களை நேரான பாதையிலிருந்து திசைமாற்றிவிடுவார்கள் நீங்கள் அவர்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தாலோ அவர்கள் உங்களைக் கொலை செய்துவிடுவார்கள்" இச்சந்தர்ப்பத்தில் ஒருவர் "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அப்போது நாம் என்ன செய்வோம்?" என வினவினார். அதற்கு இறை தூதர் (ஸல்) அவர்கள், "ஈஸா நபி (அலை) அவர்களின் தோழர்கள் செய்ததையே நீங்களும் செய்யுங்கள். அவர்கள் வாளால் அறுக்கப்பட்டுச் சிலுவையில் தொங்கவிடப்பட்டார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து தமது உயிரை அர்ப்பணிப்பது, எல்லா வல்லவனான அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியாமல் வாழும் வாழ்க்கையை விட அதி உத்தமமானது".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. QD 113/News/90

மாவனெல்லையில்.........................

நவீன டிசைன்களில் அசல் 22 கரட் தங்க நகைகள் ஓடர் கொடுத்து
குறித்த நேரத்தில் செய்து கொள்ள தலை சிறந்த ஓரே இடம்:

செலக்ஸன் ஜ-வலர்ஸ்

19 A, சென்றல் மார்கட்,
மாவனல்லை.



SELECTION JEWELLERS
19A, CENTRAL MARKET,
MAWANELLA.

Published by Sri Lanka Jama'ath-e Islami 77, Dematagoda Road, Colombo. 09.
Printed at I. P. C. Printing Press, 320, Dematagoda Road, Colombo 9. T' phone: 698771

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org